அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு

....செயல்! திறன்! மூச்சு! வாழ்வு! அனைத்தையும் ஒப்படைத்தோம் பொதுவாழ்வுக்கு....நமது உழைப்பின் பலன் பழுக்க.....

நட்சத்திரப் பொறிசிதறுகிறது!
நட்சத்திரம் விழுந்து விடுவதில்லை!!

* * *

இலைகள் உதிர்ந்து விடுகின்றன—
கிளையே முறிந்தாலும், மரம் விழுந்துவிடுவதில்லை.

எல்லோரும் எழுங்கள் தோழர்காள்!

* * *

இயற்கை ஒவ்வொரு விநாடியும் தேய்கிறது — தேய்கிற அளவுக்கு இன்னொரு பக்கம் வளர்கிறது. இது, விஞ்ஞானிகள் முடிவு. வாழ்க்கையின் முடிவும் இதுதான்.

* * *

நடக்கிறோம்—நடக்கும் போதே சாகிறார்கள். அதனால் வாழ்க்கையை வெறுத்தா ஓடிவிடுகிறோம்? கொஞ்ச நேரம் கலங்கும் உள்ளம். அடுத்த விநாடி தன் வேலையைப் பார்க்காமலிருப்பதில்லை. விசித்திரமான இந்த உலகத்தை வெறுத்து விடுவதில்லை.

* * *

நம்முடைய இலட்சியம் நமக்கு விழாத விண் மீன்! வெண்ணிலா! உதய சூரியன்! கனிதரும் மரம்!—என்கிற எண்ணங்களே, கொள்கை வீரர் கே. வி. கே. சாமியின் சமாதிக்கு, தூத்துக்குடியிலே மரியாதை தெரிவித்து நின்றபோது என் இதயத்தில் எழுந்தன. சாமியின் சாவு, நம்மால் தாங்க முடியாததாயிருந்தது. தூத்துக்குடித் தோழர்கள் துடித்தார்கள். என் செய்வோம்? அதை எண்ணி ஏங்கிக்கொண்டேயிருக்கவில்லை — மரியாதையை மனதுக்குள் செலுத்தியபடி—கழகத்தை வளர்க்கிறோம்! வாடிவிடவில்லை!!

* * *

கொள்கைக்காக இறந்த குணக்கோமானின் திரு உருவச்சிலையை அறிஞர் அண்ணா வைத்தார், குத்துப்பட்ட இடத்தில். அச்சிலை என்றும் வாழும்! கொள்கைக்காகச் சிலையாகும், பாக்கியம், எல்லோருக்கும் கிடைப்பதில்லை. எண்ணமெல்லாம் நிறைந்தார் சாமி. பூமியின் மடியில், சாமியை மூடிக்கொண்டு அமைதியோடு இருக்கிறது, அவர் சமாதி. அருகே அந்த மாவீரன் தன் காலத்தில் கட்டிய ஒரு பள்ளிக்கூடமும்—நகரில் அவர் வளர்த்த கழகத்தின் வெற்றிச்சின்னங்களாக வீரர் படையும் விளங்குகின்றன! சாமியின் பெயரை முழக்குகின்றன!!

* * *

காணாத காட்சி கண்டேன் தூத்துக்குடியில்! கண்மணிகள் தோற்றம் கண்டேன்! வீரர்கள் வரிசை கண்டேன்! மக்கள் தம் உள்ளம் கண்டேன்!—மனதெலாம் ஊக்கம் கொண்டேன்!!

தூக்கம் கொடாத விழிகள்—என்று வருமோ இன்பத் திராவிடம் எனும் ஏக்கம் நிறைந்த முகங்கள்—எழுப்பிய முரசொலி, ஒலித்திட்ட முழக்கம், வந்திட்ட ஊர்வலம், அலங்கரித் திருந்த ரதம்' அழகூராக வீதிகளை ஆக்கியிருந்த திருக்கோலம் — என்னென்பேன்! எப்படி எழுதுவேன்!!

இந்த எழுச்சிகளோடு சாமியும் இருந்திருந்தால் பவனி இன்னும் பெருமை பெற்றிருக்கும்? என் செய்வது! எண்ணப்புயல் கொண்டவர்கள் இழுத்துப் போட்டனரே, குத்தினர்—கொன்றனர்—நம்மிடமிருந்து பிரித்தனர்—பிணமாக்கினர்.

அந்தப்பாவிகள் சிரிக்கும்படியாகுமன்றோ, கழகம் அங்கே வளராமலிருந்திருந்தால். சிவசாமியும், ஜோசப்பும் சிந்தை நொந்து கண்ணீர்க் கடலிலேயே மிதந்திருந்தால், கண்டிருக்க முடியுமோ, மாபெரும் அணி

2—ம் பக்கம் காண்க

தலைவர் ஆசையின் வினை தனிக் கட்சி மர்மம் சம்பத்தின் சதி!

சம்பத், பெரியார் ஈ. வெ. ராவின் அண்ணன் பிள்ளை என்ற முறையில் அவருக்கு ஏதோ ஆதரவு இருந்ததும் பின்பு தி. மு. கழகத்தின் சிறந்த தலைவர்கள் வரிசையில் தனது முயற்சியால், திறமையால் உயர்ந்ததும் கடந்த தேர்தலில் நாமக்கல் தொகுதியிலிருந்து தி. மு. கழக உறுப்பினராக டெல்லி பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதும், திடீரென தி. மு. க. வில் தனக்கென ஓர் குழுவை சேர்த்துக் கொண்டதும், பின்பு தி. மு. கழகத்திலிருந்து விலகியதும், இப்போது புதுக்கட்சி அமைக்க நுங்கம் பாக்கம் பங்களாவிலே திட்டங்கள் தீட்டுவதையும் பார்க்கும் போது, போராட்டங்கள் இல்லாது தியாகத் தழும்புகள் இல்லாது 'தலைவராக' ஆகும் ஓர் சிலர் இப்படித் 'தனிக்குடித்தன' ஆசைக்கு ஆட்பட்டு அதற்குத் தன்னையும் தனது சகாக்கள் சிலரையும் பலி கொடுப்பார்களோ எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தி.மு. கழகத்தில் திரு அண்ணாதுரை அவர்களுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணக் கூடிய அளவிற்கு திரு. சம்பத் உயர்ந்திருந்தார். இவ்வளவு குறுகிய காலத்தில் அரசியல் வாழ்விலே இத்தகைய புகழ்பெற்றவர்கள் திரு. சம்பத் உட்பட மிகச் சிலர் தான் இருக்க முடியும். அண்மையில் அவருக்காகவே 'அவைத் தலைவர் என்ற பதவிகூட சிருஷ்டிக்கப்பட்டு, அப்பதவியையும் அவரே ஏற்றுக் கொண்டார்.

இத்தகைய தலைவர் பதவிகளும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையும் சேர்ந்து

திராவிட நாடா! தமிழ் நாடா!!

"பகற்கனவாமே திராவிட நாடு--பலிக்காது என்று சம்பத் சொல்லிவிட்டாரே--அய்யய்யோ என்ன செய்வது! அடடா, இத்தனை நாளும் இது கிடைக்குமென்று நம்பி மோசமன்றோ போய்விட்டோம்"

என்று, எவருமே, எண்ணவில்லை, அங்கே! எண்ணாதது மட்டுமல்ல, இப்படியொரு குழப்பத்தை ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராயிருந்த சம்பத் ஏற்படுத்துகிறாரே, இதுபற்றி என்ன விளக்கம் தருகிறீர் என்றாவது, கேட்பார்களன்றோ? சம்பத்துக்கு உண்டான சந்தேகம், அவர்களில் யாருக்குமே, உருவாகவில்லை! சம்பத்தைப்போல், தலைவராகயிருந்துவிட்டு, அந்த மரியாதையை அணு அணுவாகச் சுவைத்தவர்களல்ல, வந்தவர்கள். அங்கே வரவேண்டுமா—இங்கே கூட்டமா—சரிசரி, இந்த தேதியில் வைத்துக்கொண்டு—இத்தனை ரூபாயை அனுப்பிவை—என்று கேட்டால், வசூலித்துக் கொடுத்து, கூட்டத்தின் மூலம் கொள்கை விளக்கம் பெற்றனர் பலர் என அறிந்திடின், அதைவிடப் பெரியதொரு பேறுண்டோ என்று எண்ணிடும் தோழர்கள், ஆற்றங்கரையிலும், குளத்தங்கரையிலும், அரசமரத்தடியிலும், வீட்டுத் திண்ணையிலும், அனுதினமும், மாற்றுக் கட்சியினரிடம் கொள்கை விவாதம் புரியும் உழைப்பாளிகள், உள்ளத்தில் தூய்மை யெனப்பட்டதொரு கொள்கைக்காகப் பணி புரியும் உத்தமர்கள். ஊர் மெச்ச ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று நினையாமல், உண்மை என்று உணர்ந்ததற்காகப் பாடுபடும் பாட்டாளிமக்கள்.

தூத்துக்குடியில் கண்டது

[நமது நிருபர்]

தூத்துக்குடியில், நடைபெற்ற. பொதுக்குழு கூட்டத்திலே, சம்பத் எதிர்பார்த்தாராம் — சண்டமாருதமெனத் தன்னைப் பற்றி விவாதம் நடக்கும்---பகற் கனவு எனத் தான் கூறியது குறித்து எல்லோரும் பேசுவர்---என்றெல்லாம். ஒருவருக்குக்கூடக் கொள்கைக் குழப்பம், உருவாகவில்லை! சிறிதுகூட ஐயம் ஏற்படவில்லை!!. குலவினோமே, கூடினோமே; கொள்கைக் குன்றே எனப் போற்றினோமே-குன்று, பணிந்துவிட்டதே—கொள்கை மாளச் செய்வேன் எனப் பேசுகிறதே—என்ன அநீதி! என்ன அக்கிரமம்!! எனும் எரிச்சல்கூட இல்லை. "ஏதோ, எதிர்பார்த்த ஒரு சம்பவம் நடந்துவிட்டது!" என்கிற மனநிலையினையே, அனைவரிடத்திலும் கண்டேன். ஒருவேளை இந்த மனநிலையால், சம்பத் கூறிடும் விளக்கத்தை, ஆழ்ந்து பார்க்க மறுக்கின்றனரோ, பொதுக் குழு உறுப்பினர்கள். ஒருவர்கூட ஒரு கேள்விகூட கேட்கவில்லையே—என்று நான் நினைத்தேன். என் நினைப்புக்குச் சரியான பதிலைத் தந்தனர், வெள்ளம்போல் கூடி வந்த கழகத் தொண்டர்கள்! சம்பத் குழாத்துக்கு உண்டான சந்தேகம்—திராவிட நாடு கிடைக்குமா என்கிற சந்தேகம்—பொதுக் குழு உறுப்பினர்களுக்கு உண்டாகவில்லை. எவரும் எதுவும் கேட்கவுமில்லை. கழகத்தின் தலைமைக் குழுவான, இதில் அங்கம் வகிக்கும் எவருக்கும்தான் ஏற்படவில்லையே! இதோ, அலை அலையாகத் திரண்டு வரும் கழகத் தோழர்கள் மத்தியிலாவது இதைப்பற்றிய விவாதம் நடக்கிறதா--எனப்பார்ப்போம், என்று உலாவினேன். பொதுக் குழு முடிந்து, பொதுக்கூட்டம், ஆரம்பமாவதற்கு முன் ஒரு மாபெரும் ஊர்வலம், தூத்துக்குடியின் வீதிகள் எங்கும் வந்தது.

அந்த ஊர்வலத்துக்கென்று சுற்று வட்டாரத்திலிருந்தெல்லாம் சைகிள்களிலும், வண்டிகள் மூலமும் பஸ்களிலும் பல்லாயிரகணக்கான மக்கள் வந்து, ஒவ்வொரு வீதியிலும் நின்று கொண்டிருந்தனர். அவர்களிலே, யாருக்காவது இந்த ஐயமுள்ளதா, இதுபற்றிப் பேசுகிறார்களா என்று பார்த்தேன். இதைப்பற்றிய 'மூச்சு'க்

(7-ம் பக்கம் பார்க்க)

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வகுப்பை? சாமிக்குச் செய்யும் மரியாதை, அவர் வளர்த்த கொள்கைகளை வளமாக்கி, அக் கொள்கையைக் கொன்று விட முயன்ற குடிகேடர்களுக்குப் பாடம் புகட்டுவது தானே!!

* * *

சமாதிகள் பல உண்டு—சாமி, மஜீத், பாண்டியன், ஆரோக்கியசாமி, இராமலிங்கம்—என்று, தி. மு. க. வில் நாம் வளர்த்த கொள்கைக்காக உயிர் துறந்த தாளமுத்து, நடராசன், வேலாயுதமும் உண்டு. இவர்களெல்லாம் பாடுபட்டது, இன்பத்திராவிடம் காண்பதற்காகன்றோ! அவர்கள் விரும்பியதைச் செய்து முடிப்பது தானே, நமக்கு அழகு. அதுதானே, தியாகிகளுக்கு நாமளிக்கும் மரியாதை.

* * *

இந்தக் கேள்வியினையே விடுத்தார் அண்ணா—"என் இலட்சியம் திராவிடநாடு திராவிடருக்கே! என்றும் இது மாறாது"—என்றும் தெரிவித்தார் கடலலை போல் முழங்கினர் கூடியிருந்த பொது மக்கள்! கண்ணிருண்டோருக்குப் பாடமாக அமைந்த காட்சி அது! தியாகிகள் சமாதிகளை நினைப்போம்—தீரர்களை மதிப்போம்—அண்ணாவின் சூளுரையினை மதிப்போம்—கொள்கையால் கூடினோம் — குடும்பம் போல் வளர்கிறோம்—இதை வளர்ப்போம்! வாழ்வோம்!!

இடையில் செல்வோர், செல்க—இலைகள் உதிர்வதால், எழில் சோலை, அழிந்திடுமோ! எண்ணத் தூய்மையிலாதோர் செல்க—என்றும் இருக்கும் நம் உதய சூரியன் !!—என்கிற கருத்தினை, காட்சியினை, இவ்வுலகுக்கு எடுத்துக் காட்டிய பொதுக் குழுகூட, ஏற்பாடுகளைச் செய்த, தூத்துக்குடி 'முத்து'க்கள் அனைவரையும் 'அறப்போர்' வாழ்த்துகிறது. அன்பு-எம். எஸ். சிவகாமி (மாவட்டச் செயலாளர்)யின் அன்புள்ளத்தையும், அவர் தம் தோழர்களையும், கரங் கூப்பி வணங்குகிறது. வாழ்த்துகிறது.

எல்லோரும் எழுவோம்! உழைப்போம்! பாடுபடுவோம்!—எதிர் வருகிறது தேர்தல்; எதைப் பற்றியும் எண்ணாமல் நம் வேலையைச் செய்வோம். வெற்றியைக் குவிப்போம். விரைவீர் தோழர்காள், வெல்க அறவழி! ஒழிக சுயநலம்! வாழ்க தியாகிகள் வளர்த்த கொள்கை!!

—0—

சம்பத்தின் சதி...

அவரை நிலை கலங்கச் செய்து விட்டன போலும்!

அவர் தன்னைத்தானே மிக அதிகமாக எடை போட்டுக் கொண்டார்.

தனது சுட்டுவிரல் அசைவிலே தி. மு. கழகம் ஆடவேண்டும் என்று நினைத்தார். அதற்கு யார் யார் இடையூராக இருந்தார்களோ அவர்களை 'பிற்போக்கு வாதிகள்', 'சுயநலமிகள்' 'சுகவாசிகள்' என்ற வார்த்தை ஜாலங்களால் வர்ணித்து அதன் மூலம் தன்னை ஓர் முற்போக்கு வாதி எனக் காட்ட முயன்றார்.

திரு. சம்பத் தற்போது தி. மு. க. விலிருந்து விலகியது திட்டமிட்டு செய்யப்பட்ட சதியாகத் தெரிகின்றதே தவிர, அவர் வர்ணிப்பது போல 'கருத்து வேறுபாடோ, பூசலோ' இல்லவே இல்லை. எந்தக்கட்சியில் தான் கருத்து வேறுபாடு கொண்ட தலைவர்கள் இல்லை. காங்கிரசிலே நிலக் கொள்கையிலே கருத்து வேறுபாடு, மொழிப் பிரச்சினையிலே வேறுபாடு. தொகுதிகள் பிரிப்பதிலே முரண்பாடு. இதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் பல, பல கோஷ்டிகள். கம்யூனிஸ்ட் கட்சியிலும் இதுவே தான். ரணதிவே கோஷ்டி, ஜோஷி கோஷ்டி அஜாய் கோஷ் கோஷ்டி, டாங்கே கோஷ்டி என்று பலர், பலவிதமாக சார்ந்து இருக்கிறார்கள், இவர்களுக்கு தேர்தலிலே கூட்டுச் சேர்வதிலிருந்து சீன ஆக்கிரமிப்பு பற்றி கூறுவது வரை கருத்து வேறுபாடு இருந்தாலும் அவர்கள் கட்சி மாறுவதில்லை. இப் பிரச்சினைகளை தங்களது பத்திரிகைகளிலே, மேடைகளிலே பேசித் தீர்க்க முயன்றதில்லை. இது தான் பொறுப்புள்ள தலைவர்களுக்குள்ள இலட்சணம்.

ஆனால் திரு சம்பத் ஆரம்பத்திலேயே கட்சியிலிருந்து விலகுவதற்கு முடிவு செய்து வைத்து விட்டு அதற்காக வீண் வம்புகளில் ஈடுபட்டார். பிடிக்காத மாமியின் கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பது போல 'தி. மு. க. வரலாறு' என்ற புத்தகம் வெளியிடும் ஓர் மிகச் சாதாரண கூட்டத்திற்கு திரு. அண்ணாதுரை வராதது ஓர் காரணம் எனக் கூறி, இது தவறினால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்ற கருத்துடன் தி.மு.க. விலிருந்து விலகி விட்டார் தனக்குத் துணையாக 'மனக்கசப்பு' கொண்டவர்களின் மனதைப் பேதலிக்கச் செய்து அவர்களையும் தன்னுடன் 'மாபெரும் தூய்மையான ஸ்தாபனம்' அமைக்க வருமாறு கூறுகிறார். பொது மக்களுக்குத் தெரிந்த வரை திரு. சம்பத் இதுவரை புரட்சிகரமான கருத்துக்களை தி. மு. க. வில் புகுத்து வது பற்றிய திட்டங்களை தனது எழுத்துக்களிலோ, பொதுக் கூட்டங்களிலோ வெளியிட்டதாகத் தெரியவில்லை. அல்லது அவர்கள் கட்சியின் மாநில மாநாடுகள், மாவட்ட மாநாடுகளில் தீர்மான உருவில் கொண்டு வந்து விவாதித்ததாகவோ தெரியவில்லை. கமிட்டிக் கூட்டங்களிலோ ஓர் சில திருத்தங்களை, அவர்

—முன்பத்தி காண்க

கொண்டுவராவிட்டாலும் அவரை சார்ந்தவர்கள் கொண்டு வந்திருக்கலாம். அவைகூட கட்சியின் கொள்கைகளையோ, செயல் முறைகளையோ மாற்றக் கூடியவையாக இல்லாமல், ஒரு சில பதவிகளுக்கு அதிக அதிகாரம் கேட்கும் திருத்தங்களாகவே அமைந்தன, இவையல்ல கொள்கையை உருவாக்கும் விதம்.

வடநாட்டிலே 'பலதேவ்சிங்' உண்ணாவிரதம் இருந்ததைப் போல. இவரும் உண்ணாவிரதத்தை விளையாட்டுத்தனமாக ஏற்றார். அதன் முடிவுகள் கேலிக் கூத்தாக முடிந்தன. அப்போதும் திரு அண்ணாதுரை எப்போதும் போல கை கொடுத்து உதவினார். உண்ணா விரதம் திரு. அண்ணாதுரையின் செல்வாக்கை

(4-ம் பக்கம் காண்க)

நமது பாசறை

2. நாவலர்

தேன்கொடுக்கும் கொல்லிமலை திருஉருவம் ஒன்றேந்தி
நான்மனிதன் எனச்சொல்லி நடைபோட்டு வந்ததுவோ?
எதிரிகளை முறியடிக்க எழுந்துவிட்ட மதக்களிறோ?
உதிரிகளின் மனம்திருத்தி உரமூட்டும் அறிவகமோ?
ஆண்ட தமிழ்வேந்தர் மீண்டுவந்து விட்டாரோ?
ஏண்டாநாம் வாய்கொடுத்தோம் இவரிடத்தில் என்றெண்ணி

எதிர்த்தோர் தொடைநடுங்கும்
மாற்றார் படைநடுங்கும்
இமயமலை நடுங்கும் எழில்பூத்த பெருந்தோற்றம்!
இவருக்கு

சிங்கத்தை மிரளவைக்கும் புரட்சிப் பார்வை!
செந்தேனை முறியடிக்கும் இனிப்புப் பேச்சு!
தங்கத்துப் பளபளப்பை வெல்லு கின்ற
தளதளப்புப் பொன்மேனி! இந்த நாட்டார்
அங்கத்தைக் கையாலே போர்த்திக் கொண்டு
அடிவயிற்றில் பசிகிள்ளத் துடிது டித்துத்
தொங்குகின்றார் மரக்கிளையில் பிணமாய்! இந்தத்
துயர்கொண்டு துடிதுடிக்கும் புரட்சி உள்ளம்!
இவர்பேச்சோ

குற்றாலத் தேனருவி கொட்டும் முழவோசை
கற்றவர்கள் பாராட்டும் கருத்துநடைச் சங்கீதம்!
மற்றவர்கள் மாற்றார்கள் மனந்தளர்ந்து வாய்பிளந்து -
கற்கண்டோ? செங்கரும்பா? கனிச்சாறு?
வானத்துப் பேரிடியா?
வடவருக்கு வைக்கின்ற புதுவெடியா?
நல்ல தமிழ்மழையா? நளினநடைச் சொற்பொழிவா?
வெல்லத்துப் பாகா? எனஎண்ணி வியக்கும் பேராற்றல்!

யார்அந்த ஆற்றலின் திருஉருவம்?
அவர்தான்
அண்ணாவின் தம்பி! தங்கக் கம்பி!
கழகத்தின் காவலர்! நமது நாவலர்

நெடுஞ்செழியன்!

—புலவர் பொன்னிவளவன்.

'திராவிட நாடு' அறநாடு!

சரிதச் சான்றும் உண்டு

திரு. வி. க. கருத்துரை

இந் நாளில் நமது தென்னாட்டில் ஒரு வித முழக்கம் எழும்பிய வண்ண மிருக்கிறது. அஃது எது? அது 'திராவிட நாடு' 'திராவிட நாடு' என்னும் முழக்கம்.

திராவிட நாடு எது? 'திராவிடம்' வழங்கும் நாடு 'திராவிட நாடு' என்று எவருங் கூறுவர். திராவிடம் என்று தோன்றியது? இன்று? நேற்று? அது தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறல் இயலவில்லை. அது தொன்மை வாய்ந்தது. திராவிட நாடு எனினும், அஃது இன்னும் உயிர்ப்புடன் நிலவுகிறது. இது திராவிடத்தின் செவ்விய பண்பாட்டைப் புலப்படுத்துகிறது.

திராவிட நாட்டின் தொன்மை 'மகேஞ்சதா ரா' 'ஹாரப்பா' முதலியவற்றைப் பற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகளான் இனிது விளங்குகிறது. 'பஞ்ச திராவிடம்' என்றொரு வழக்கு உண்டு, இவ்வழக்குச் சரித்திர காலத்தையுங் கடந்தது. தென்னாட்டிற் பிறந்து, வட நாடு போந்து, அதை அறிவால் பல வழியிலும் பண்படுத்திய ஆதி சங்கரர் 'திராவிட சிசு' என்று திருஞான சம்பந்தரைப் போற்றினர். அப்போற்றி எழுந்து பல நூறாண்டுகளாயின. அறிஞர் சுந்தரம் பிள்ளையின் 'மனோன் மணியத்தில்' திராவிடம்' வீறுவதைக் காணலாம். கவி ரவீந்திரரது நாட்டுப் பாட்டில் 'திராவிடம்' அணி செய்தல் வெள்ளிடை மலை. இரு மொழிப் புலவர், யாழ்ப்பாணம்—சபாபதி நாவலர் இயற்றிய ஒரு நூல் 'திராவிடப் பிரகாசிகை' என்ற தலைப்பைத் தாங்கி நிற்றலும் ஈண்டுக் கருதற்பாற்று.

திராவிடத்துக்கு உரியவர் எவர்? திராவிடர் என்று சொல்லலும் வேண்டுமோ? 'திராவிடர்' என்னும் சொற்குப் பொருளென்னை? பலதிறப் பொருள்கள் வழங்கப் படுகின்றன. அவற்றுள் ஒன்றை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். அஃது 'ஓட்டுகிறவர்' என்பது,

'ஓட்டுகிறவர்' என்பதற்குத் தன்னலப் .பேயை ஓட்டுகிறவர் என்று பொருள் விரிக்கலாம். தன்னலப் பேயை ஓட்டலாவது பொதுமைத் தெய்வத்தை நிலை பெறுத்துவதென்க. பொதுமை அறம் பழந் திராவிட மக்களது பண்பாட்டின் விளைவு. இதற்குச் சான்றுகள் பல தேடவேண்டுவதில்லை. 'யாதும் ஊரே யாவருங் கேளீர்' 'அந்தண ரென்போர் மற் றெவ்வுயிர்க் குஞ் — செந் தண்மை பூண்டொழுக லான்' 'ஒன்லே குலமும் ஒருவனே தேவனும்' 'தன்னுயிர் தான் பரிந் தோம்பு மாறுபோல் — மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்' 'எல்லார்களும் ஏத்தும் ஈசன்' 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்—தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந் தம் முயிர் போல் எண்ணி...' எனவரூஉஞ் சான்றோர் மொழிகள் சில சாலும்.

திராவிட நாடு ஒருபோது நாவலந்தீவாய்த் திகழ்ந்து; மற்றொரு போது பரதகண்டமாய்ப் போலிந்தது; பின்னே விந்தயம் வரை இழிந்தது; இடை இடையே பல திற மாறுதல் அடைந்தது; இப்பொழுது தமிழ் தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகிய நான்காய் அவற்றுள் ஒன்றிக் குலவுகிறது.

திராவிட நாட்டில் குடியேறி நிலைத்தவர் பலர். ஒரு நாட்டில் குடியேறி நிலைத்தவர் பண்பாடும், பழங்குடி மக்கள் பண்பாடும் நாளடைவில் ஒன்றுபடுவது இயற்கை இவ்வியற்கைப்படியே திராவிட மக்கள் பண்பாடும், ஒன்று பட்டன. தொடக்கத்தில் இருசாரார்க்கும் பூசல் விளைந்தது உண்மை. அப் பூசல்களை வரலாற்று நூ[ல்]களில் பார்க்கலாம். வரலாற்[று] ஆராய்ச்சிக்கு உறுகருவியாகக் கோடலே அறிவுடைமை. அதை வேற்றுமை வளர்ச்சிக்குப் பயன் படுத்துவது அறிவுடைமையாகாது. பல்லாண்டுகட்கு முன்னர் பிணங்கிப் போராடிய எத்துணையோ சமூகங்கள் நாளுக்கு நாள் பிணங்குவதை விடுத்து இணங்கி இணங்கி வாழ்வு பெறலாயின. இதற்குச் சரித்திரச் சான்றுகள் பல உள்ளன.

> தமிழ்த் தென்றல் திரு. வி. க, அவர்கள் 'திராவிடநாடு' எனும் நூலுக்குத் தந்த முன்னுரை...

இந்நாளில் 'திராவிட நாடு' என்னும் பெயரால் ஓர் இயக்கம் முகிழ்த்து வருகிறது. அவ்வியக்கத்தின் நோக்கங்கள், திராவிட நாடு சுரண்டலுக்கு இரையாகாதவாறு அதைக் காப்பதும், அதன் பொருட்டுத் திராவிடத்தின் பண்டை இயல்புக்கும் இக் காலத்துக்கும் உரிய பொதுமை அறத்தை அதன்பால் வளர்ப்பதும், அவ்வறத்தை வடபுலத்தும் அன்பால் புகுத்துவதும், அவ்வழி இந்தியாவை ஒருமைப் படுத்துவதும் உலகுடன் ஒத்து வாழ்வதும், இன்ன பிறவுமாம். திராவிட இயக்கம் சாதிமத வேற்றுமைகளைக் கடந்தது; மக்களை ஒருமைப் படுத்துவது. அதனடியில் இகல், பகை, காழ்ப்பு, பொறாமை முதலிய அனல் கனல்வதில்லை. திராவிட இயக்கத் தொண்டு - அருளை —அகிம்சையை — அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது கண்கூடு.

திராவிட இயக்கம் ஒரு கொள்கையுடையார்க்கே நலஞ் செய்ய முகிழ்த்துள்ளது என்று சில விடங்களில் கருதப்படுகிறது. அது தவறு. திராவிட இயக்கத்தின் பயனாக உருக்கொள்ளும் 'புதிய திராவிட நாடு' பலதிறக் கொள்கையுடையார்க்கும் இடங்

(4-ம் பக்கம் பார்க்க)

நீங்களும்

கே. கே. சாமி எனும் விருத்தாசலம் தோழர் ஒருவர் வேகத்தைக் குழைத்துக் காரத்தைக் கலந்து கடிதம் எழுதியிருக்கிருர். சென்ற இதழில் வந்த நாவலரின் 'கலேயும் கட்சியும்' எனும் கட்டுரை, அவர் கண்களில் கோபக்கனலே வரவழைத்திருக்கிறது.'' உண்மையை ஏனய்யா மறைக்கிறீர்? இருக்கலாம் ஏனேய கட்சிகளிலும், கலேஞர்கள். ஆனல், உங்கள் கட்சியை ஆட்டிப்படைக்கி வர்களே நடிகர்கள் தானே. ந்த உண்மையை ஏன் ஒளிக்க வண்டும். இனிமேலாவது ஒழுங்காக எழுதுங்கள்'', என்று எச்ச ந்திருக்கிருர். யார் இந்த ஆசாமி ன்று எண்ணவில்லே, நாம் கடிம் எழுதும் மரியாதையினே, அவர் மறந்திடினும், அவரைப் போல அய்யம் கொண்டோர், இன்னும் இருக்கின்றனர் என்பதால், இதை எழுதலானேம். உண்மையை மறைத்து அதன் போர்வையில் வாழ வேண்டிய அவசியம் யாருக்குமில்லே', இங்கே! தி.மு.க. யாரோ சில நடிகர்களின் உதவியாலோ, ஒத்தாசை யாலோ நடைபெறவில்லே. 'நான் மதுரை வீரன்', 'நான் சின்ன மருது' 'நான் ஆனந்தன்' என்று வேடம் புனேந்து கொண்டு, நம்முடைய கழகக் கூட்டங்களுக்கு வருவதில்லே, நடிக நண்பர்கள். அவர்கள் சுட்டு விரலசைவிலே, கழகம் ஆடவேண்டிய அவசியத்திலும் இல்லே! கழக நிதிக்கென ஐயாயிரம் ரூபாய் எம்.ஜி.ஆர். அளித்ததைத் தவிர, வசூலாகியிருக்கும் ஒன்றரை லட்சம் ரூபாயும் மக்கள் அளித்தது, இந்த நடிக நண்பர்களுடன், என்னேப்போல எழுத்தாளர்களாயிருப்போர், பழகுகிருேம். நாங்கள் கதை வசனம் எழுதும் படங்களில், அவர்கள் நடிப்பதால், நாங்களும் அவர்களும் அடிக்கடி சந்திக்கிருேம், கழகத் தொடர்பு இருப்பதால், இந்த சந்திப்புகளின் போது, அன்பும் தொடர்பும் அதிகமாகிறது. இதைத் தவிர, கழகத்தின் விதிமுறைகளேயும், நடை வழிகளேயும் வகுப்பது, நடிக நண்பர்களின் வீடுகளல்ல — எமது பொதுக் குழு. எனவே, கழகத்தை நடிகர்கள் ஆட்டிப்படைக்கிருர்கள் என்பது, அசூயை கொண்டோரின் ஆத்திரவாதமாகும்! அப்படியே, வாதத்துக்கு அவர்கள் ஆட்டிப்படைப்பதாகவே, வைத்துக் கொள்வோம், நடிக நண்பர்களால், இது நாள் வரையில், இலட்சிய இடையூறு ஏற்பட்டதென்று, விரலே விட்டுச் சொல்லமுடியுமா. எம் கருத்துக்குப் பொருந்தாத, கதைகளில் நடிக்க மாட்டோம் என்று அவர்கள் இழந்த கணக்கைக் காட்டலாமே ஒழிய, இந்த நடிகரால் இந்தக்கேடு, இந்த இடத்தில் வந்தது என்று யாராவது சொல்ல முடியுமா. எந்தத் தீர்மானத்திலாவது தலேயிட்டு, 'இப்படித் தானிருக்க வேண்டும்! என்று வாதாடியதுண்டா. அய்யோ பாவம்! அவர்கள், நாம் சொல்வதைச் செய்கிருர்கள்—நம்முடைய கொள்கைகளேப்பேசுகிருர்கள்—படங்களில் காட்டுகிருர்கள் — நம்முடையவர்களாக விளங்குவதிலே, பெருமை கொள்கிருர்கள். அவர்களேப் போய், ஆட்டிப் படைக்கிருர்கள் என்பது, அக்கிரமமான வாதம். விருத்தாசலம் சாமியைக் கேட்கிருேம்! அவரைப் போல் கருதுவோரிருந்தால், அவர்களேயும் கேட்கிருேம்! கழகத்தை, கலேஞர்கள், தமது சொந்த நலனுக்குப் பயன் படுத்தினர்—கழகமும் தன் வேலேயை விட்டுவிட்டு, அவர்கள் இழுத்த இழுப்புக்குப் போகிறது என்பதற்கு, ஒரே ஒரு உதாரணம் காட்டமுடியுமா.

சாமிக்கும், அவர் போன்ற சந்தேக ஆசாமிகளுக்கும் 23-4-61 "மன்றம்'' இதழில் வந்துள்ள கட்டுரையைப் படித்துப் பார்க்குமாறு, சிபாரிசு செய்ருேம். அதை படித்த பின்பும் சந்தேகம் எழுமானல், எரிச்சலேக் கொட்டாது, எழுதட்டும். பதிலளிக்க, பொது மக்கள் சேவகன் என்ற முறையில் எப்போதும், நாம் தயார்.

ஆசிரியர்.

*

அறிஞரின் பெருந்தன்மை

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

அண்மையில், தி. மு. க. விலிருந்து பிரிந்து தனிக்கட்சி துவங்கியிருக்கும் தோழர் சம்பத்து அவர்கள், நமது மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணு அவர்களே, நேற்றைய திருவல்லிக்கேணி கடற்கரைப் பொதுக்கூட்டத்திலும், அதற்கு முந்திய சிலபல கூட்டங்களிலும். 'நண்பர் அண்ணுத்துரை' என்றே இறுமாப்போடு பேசியிருக்கிருர்.

ஆனல், இதற்கு முற்றிலும் மாருக, அறிஞர் அண்ணு அவர்கள், இதுவரையிலும், சம்பத்தை தம்பி சம்பத் என்றும், சம்பத் பேசினன் போனன், வந்தான் என்றுமே பேசியும், எழுதியும் வந்தவர், சம்பத் பிரிந்த பிறகு, இவ்வார 'திராவிட நாடு' இதழில் தோழர் சம்பத் பேசினர்; எழுதினர்; பிரிந்தார் என்றெல்லாம் 'அர்' விகுதி போட்டு மதிப்போடும், பெருந்தகையோடும் எழுதியுள்ளார். தம்மைவிடச் சிறியவன் எனத் தெரிந்தும் பிரிந்த பிறகு அவருக்கு அண்ணு அவர்கள் கொடுத்த மரியாதை அறிஞரின் பெருந்தகையையே காட்டுகிறது.

அன்பு
த, நாராயணசாமி,
சென்னே-1
24-4-61

மதுரை நகர் தி. மு. கழக கிளேக்கழகத் தோழகட்கு

மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளர், துணேச் செயலாளர் பொருளாளர் ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்கப்படடு விலக்கி வைத்திருப்பதால் மதுரை நகர்க் கழக சம்பந்தமான விபரங்கட்கு மதுரைவட்ட தி. மு. கழகச் செயலாளர் பி. எஸ். மணியன் மூலம் தொடர்புகொள்ள வேண்டுகிறேன்.

எஸ். முத்து

"சம்பத் படிப்பகம் மூடப்பட்டது'' உடுமலே வட்டம், கணியூரில் 15-4-61 ல் இரவு 9 மணியளவில் உறுப்பினர்கள் 10 பேர் கூடி சம்பத் பெயரில் படிப்பகம் இயங்குவதா? வேண்டாமா? என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. வேண்டாம் என்பதற்கு 7 ஓட்டுகளும் வேண்டும் என்பதற்கு 3 ஓட்டுகளும் கிடைத்தன. எனவே படிப்பகம் மூடப்பட்டது.

மேலும் சம்பத்,போக்கு,செயல் இவைகள் சரியான காரணமாகத் தெரியவில்லே. "நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கு'' என்பதுபோல் உள்ளது. எனவே தான் மேற்படி படிப்பகம் மூடப்பட்டது. விரைவில் வேறு மன்றம் துவக்கவிருக்கின்ருேம்.

இப்படிக்கு
படிப்பக உறுப்பினன்
இரா. சண்முகம்
கணியூர்

பல்லவ நாடு தந்த பகுத்தறிவுச்செம்மேல!பழந்தமிழர் வாழ்வு மலர வந்த அறிஞரே! வருக! வருக!! திராவிடத்தின் பொதுச் செயலாளரே வருக! வருக!! தென்னுட்டின் பெர்னுட்ஷாவே வருக! வருக!! அண்ணுவின் தலேமை அசைக்க முடியாத தலேமை. தி.மு.க. வின் வரலாறு அழிக்க முடியாத வரலாறு வாழ்க அண்ணு! வளர்க திராவிடம்!!

இப்படிக்கு
இ. பே. சுப்பு
சூலூர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

குறைப்பதற்குப் பதிலாக, மேலும் உயர்த்தியது. திருவொற்றியூர் கூட்டம் உண்மையில் சம்பத்திற்கு பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. கட்சிப்பிளவில் கதாநாயகனுக இருக்கவும், தினமும் 10—நிருபர் தன்னேச் சூழ்ந்து செய்திகளே விசாரிக்கவும், அறிக்கைகள் விடுவதையும், விரும்பும் அவர். இவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் சமரசம் ஏற்பட்டதை விரும்பவில்லே.

எனவேமீண்டும் சமயத்திற்காக காத்திருந்தார். கடைசியில் 'சருக்கியது சாக்கு' என்பது போல வெளியீட்டு விழாவின் மேல் பழியைச் சுமத்தி விலகினர்.

இப்படி விலகியதால் அவர் பெரியாரின் பாசத்தைப் பெறலாம். ஒரு வேளே அவரது லட்சக் கணக்கான சொத்துக்களுக்கு கூட வாரிசாக மாறலாம். ஓர் எதிர்க்கட்சியை பலவீனப்படுத்த முயற்சித்ததற்காக காங்கிரஸ் கங்காணிகளின் 'சபாஷ்' பட்டத்தைப் பெறலாம். அல்லது தன்னேப் போல சுகவாசிகளின் கூட்டத்தைக் கொண்டு புரட்சி என்ற அப்பாவி அடைமொழியுடன் புதிய கட்சிகளேத் துவக்கலாம்! ஏன் காங்கிரசிலேயே கூட கலந்து விடலாம்!

என்ன இருந்தாலும் அரசியலிலே திரு. சம்பத் ஓர் கோமாளியாக மாறியிருக்க வேண்டியதில்லே. இதற்கு வேறு எத்தனேயோ பேர் இருக்கிருர்கள்.

திரு சம்பத் தி. மு. க. வுடன் சச்சரவிட்டது, விலகியது, இனி மேற்கொள்ளப் போவது ஆகிய செய்கைகளில் உள்ள இரகசியத்தை தேவைப்பட்டால் பொது மக்கள் முன்னர் வைப்போம் தி. மு. க. வைப் பிளவு படுத்த டெல்லி அசோகா ஹோட்டலிலே பல லட்சம் ரூபாய்கள் பேரம் பேசப்பட்டது என்ற செய்தியின் உண்மையும் அப்போது ஆராய்வோம்.

திரு. சம்பத்தின் விலகல் தி. மு. க. வை பலஹீனப் படுத்தி. காங்கிரசின் கரங்களுக்கு வலிவு கொடுக்கும் என்று யாரும் நினேக்க வேண்டியதில்லே. தி. மு. கழகத்தில் உள்ள தொண்டர்களும், தலேவர்களும் அவரது விலகலே ஓர் பாடமாகக் கொண்டு சீரிய தொண்டினே மேற்கொள்ள வேண்டும். புதிய திட்டங்களே செயல்படுத்த வேண்டும். அரசியலில் விளேயாட்டு அல்லது வேடிக்கைப் பேச்சுக்களேக் குறைக்க வேண்டும். அப்போது தி. மு. க. முன்னிலும் பலம் பெற்று நல்ல எதிர் கட்சிகளின் கூட்டுடன் காங்கிரசை வீழ்த்தி அடித்து, சந்தர்ப்பவாதிகளேயும் ஏமாறச் செய்யலாம்.

(மதுரையிலிருந்து வெளிவரும் பசும்பொன் முத்துராமலிங்கனர் ஆதரவுபெற்ற 'கண்ணகி' எனும் ஏட்டில் சி... —சார்லஸ் சந்திரமோகன் ... என்பவர் தீட்டியிருப்பது, ...)

நாமும்

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி 1 - வெள்ளி 28-4-61 கதிர்-8

சொல்லின் செல்வர் போய் விட்டார்!

தமிழன்னைக்கு மணியாரம் சூட்டிய மாண்புறு செல்வர்களில் ஒருவரெனத் திகழ்ந்த பேராசிரியர் ரா. பி. சேது (பிள்ளை) அவர்களின் திருஉருவப்படத்தைத்தன் மண்டபத்திலே ஏற்று, சென்ற சில நாட்களுக்கு முன்புதான், சென்னைப் பல்கலைக் கழகம் மகிழ்ந்தது! இந்தக் கிழமை, இதோ செய்தி பெறுகிறோம், அந்தத் தமிழ்க்குரல் போய்விட்டதென்று!!

தமிழின் இனிமையை எழுதுவோருண்டு. எழுத்தால் மட்டுமின்றி, எழுதுவது போன்றே பேசவும் செய்வார் பேராசிரியர். தமிழுலகுக்கு, ஒரு தனி நடையைத் தந்த பெரியார் அவர், அவரது எழுத்திலும் பேச்சிலும் வீணையின் நாதம் கேட்கும்—வேழத்தின் முழக்கமும் கேட்கும். கம்பராமாயணம் குறித்த கட்டுரைத் தொடர்களை, எந்த மாணவனும் மறத்தல் இயலாது! பள்ளியிலும்.கல்லூரியிலும் படிக்கும் காலையில் பாடல்களைப் போல மனப்பாடம் செய்வேன் அவரது, கட்டுரைகளை. அவர் வழங்கிய ஆராய்ச்சிகள் பல! அவைகளில், ‘ஊரும் பேரும்’ ஒரு உன்னதமான முயற்சியாகும். மறைமலையடிகளார், தனித்தமிழுக்கு வித்திட்ட முதல்வர் என்றால் இசைபோலத் தமிழை எழுதவும், பேசவும் முடியுமென்று வழி வகுத்தவர் அறிஞர் சேது அவர்கள் தான். அப்பேற்பட்டவருடைய, உயிர் இனி நம்மிடம் இருக்காது—அவர்தம் தமிழ்க்குரலை, நாடு, கேட்க முடியாது—என எண்ணும் போது, உண்மையிலேயே திகைப்பாயிருக்கிறது, நமக்கு,

ஆங்கிலம் கற்றால், அதன் பின் போவதே நாகரீகம் என்ற காலத்தில், ஆங்கிலத்தோடு தமிழ்ப் புலமையும் பெற்று, அதோடு வழக்கறிஞராகவுமாகி, மறைந்த முன்னாளமைச்சர் எஸ்.முத்தையா(முதலியார்) விடம் பயிற்சியும் பெற்றார். படிப்பினைத் தமிழ் வளர்ச்சிக்குப் பயன் படுத்தியதோடு போய்விடாமல், பொதுப்பணிகளிலும் ஈடுபாடு கொண்டார். திருநெல்வேலி நகராட்சியான போது, முதல் துணைத் தலைவராக விளங்கியிருக்கிறார்.

அறிஞர் அண்ணாவும், இவரும், கம்பராமாயணம் குறித்து ஒரே மேடையில் வாதிட்டதும், அங்கே அண்ணாவின் குரல் பெருமதிப்பு பெற்றதும், நம் இயக்க வரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகும். இதனால், எரிச்சலோ, காழ்ப்போ கொள்ளாமல், அண்ணாவின் தமிழ்ப்பணியையும் அவர் தமிழில் புகுத்தியுள்ள புது நடையையும் வாயார நாவாரப் போற்றிய பெருந்தகை இவர்! இது, ஒன்றே போதும், குறுகிய கூண்டுக்குள் கிடந்திடும் தன்னல மற்ற பெரியவர் இவர் என்பதைச்சொல்ல!! இரண்டாண்டுகளுக்கு முன்பு, இந்தி மொழித் திணிப்பையும், வெளிப்படையாக இவர் கண்டித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பிறகு சென்னைப்பல்கலைக் கழகத்தில் 25 ஆண்டுகள் தலைமைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். இதன் நினைவாக, தம் வாழ்நாளில் ஈட்டிய பொருளில்' இரு பல்கலைக்கழகத்திற்கும் தனித்தனியே இருபத்தைந்தாயிரம் ரூபாய்களை நன்கொடையாக அளித்தார்! இப்பேற்பட்ட வள்ளலை, நல்மனம் கொண்டவரை, மக்கள் ‘சொல்லின் செல்வர்’ எனும் பெயர் சூட்டி, மகிழ்ந்தார்கள்! அந்தச் சொல்லின் செல்வர், போய்விட்டார்.

அரசியல் விவேகமும், மொழியியல் திறனும், ஆராய்ச்சிப் பெருக்கும் அமைந்த இவர் போன்ற முதியவர்களுக்கு, டில்லி அரசு, எத்தனையோ கவுரவங்களை அளித்திருக்கலாம். எவரெவருக்கோ, எந்தெந்தப்பதவிகளையோ அள்ளியள்ளி வழங்குகிறவர்கள், இவரைப் போல ‘தமிழின்பம்’ தந்தவர்களைப் போற்றிக் கவுரவித்திருக்கலாம். வேறெங்குமிலாவிடினும், இலங்கை போன்ற தமிழர் வாழும் இடங்களுக்காவது ‘ஐ கமிஷனர்’ ஆக்கி தமது மரியாதையையும் அன்பையும் தெரிவித்துக் கொண்டிருக்கலாம். வேறுயாராயிருப்பினும், வெகு எளிதில், பல பதவிகளைப் பெற முடிகிறது! தமிழறிஞர் எனின், அவர்கள், இலைமறைகாயாகவே, இருந்து சாகநேரிடுகிறது!! அப்படி நேராமல், உயிரோடு உலவும் தமிழறிஞர்களுக்காவது, நல்லமரியாதையையும், அன்பையும், அரசுகள் காட்டுமென்று, இந்த வேதனையான நேரத்தில், சொல்லிக் கொள்வோமாக,

தமிழ் மொழிப்பற்று, எங்கும் பரவிடும் இந்த நல்ல வேளையில்—தமிழ் எனும் கடலை, ஆர அமர இருந்து ஆராய்ந்து முத்தையும் பவளத்தையும் எடுத்து வழங்கக் கூடிய ஆராய்ச்சியாளர்கள் தொகை, குறைந்து வருகிறது என்பதை, நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். முறைப்படி தமிழின் இலக்கண வகைகளையுணராதோரெல்லாம், கவிஞர் எனச் சொல்லி வலம் வருகின்றனர்! அப்படி வருவோரின் தமிழார்வம் பாராட்டப் படவேண்டியதே ஆயினும், அரும் பெரும் அறிஞர்களையும் உண்டாக்க வேண்டிய பொறுப்பு, மக்களுக்கும் அரசுக்கும் இருக்கிறது!!

தமிழில், நல் ஆராய்ச்சிகளை நடாத்திடும் தமிழ்ப்புலவர்களுக்கு வேண்டிய பல்வேறு வகை வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, பல்கலைக் கழகச் சார்பில் இயங்கும் ஆராய்ச்சித்துறைப் பகுதியினுக்கும் இன்னும் வசதிகள் அளித்து பற்பல “சேது” க்கள் உருவாக, வழி வகைகளைச்செய்ய வேண்டும். சொல்லின் செல்வர் மறைவு கண்டு, தமிழ் கூறு நல்லுலகம், மிகவருந்தும்! ஆனால், அவர் பெயர், தமிழுள்ளளவும் நிலைக்கும்- அப்படிப் பட்ட தமிழ் நூல்களைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார், அப்பெரியார்!!

நம்முடைய மனம் கனிந்த, கை கூப்புதலை அவர் திருநாமத்துக்குச் சொல்வோம். அவர் வளர்த்த தமிழுக்கு நாமும் சேவை செய்வதன்றி, வேறென்ன செய்திட இயலும் நம்மால்! வாழ்க, சொல்லின் செல்வர் பெயர்! வாழ்க, அவரை வளர்த்த தமிழ்!!

“அண்ணாத்தை” மறைவு

கலகலவென்ற பேச்சு! சிரித்தமுகம்! கவலையற்ற நடை! வீட்டுக்குள் நுழையும் போதே, பாசம் கமழும்! — இப்படிப்பட்ட “அண்ணாத்தை” யாக என் குடும்பத்துக்கு விளங்கிய காஞ்சிபுரம் திரு. இராசரத்தினம் அவர்கள் மாண்ட செய்தியைக் கேட்டதும், என்னால் நம்பவே முடியவில்லை.

செய்தி வந்த இரவு தான் நோய் வாய்ப்பட்டிருந்த அவரைச் சென்று பார்க்கலாமென இருந்தேன்! இடு காட்டுக்குச் செல்லு முன்பாவது “அரங்கண்ணல் சாரா!” என்றழைக்கும் அந்த அன்பு முகத்தைக் காண இயலாதவன் ஆனேன்—எடுத்த பிறகே, செய்தி கிடைத்தது எனக்கு!! மிகவும் மனம் நொந்தேன்.

என்னுடைய சுகதுக்கங்களைத் தன்னுடைய தாக்கிக் கொண்டு எப்போதும் பழகுவது, அவருடைய குடும்பமாகும். இராசரத்தினாரின் இளவல் இராசா பாதரை, இயக்கத் தோழர்களுக்குத் தெரிந்திருக்கும் எப்படி இந்த இழப்பை அவர் தாங்கிகுறாரோ, அறியேன்! இறந்தவரின் செல்வங்கள் முரளி, சீதரன் மீது உயிரையே வைத்திருந்தார். அவர்கள், நன்கு படித்து, எல்லா வகையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்றே கனவு கண்டார். அதற்காகவே, நடை தளர்ந்த வயதிலும், வாலிபரைப் போல் நடந்து காட்டி, உழைத்தார்.

அவரையும் அவர் பேச்சையும் பாசத்தையும் எண்ணிடின், கண்ணீரே பெருகும். என் செய்வது? நமக்கும் ஒரு நாள், அவர் வழிதானே மீதமாகப் போகிறது!! அவருடைய துணைவியாருக்கும், ஆல்போல் தழைத்து விளங்கும் குடும்பத்தாருக்கும், அருமை நண்பர் ராஜாவுக்கும் மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வது தவிர, வேறென்ன செய்ய இயலும் நம்மால்?

இலங்கை வாழ் தமிழருக்கு அனுதாபம் காட்டிட

மே 7 நாடெங்கும் கண்டனநாள்

மே 8 சென்னை இலங்கை ஐ கமிஷனரிடம் அமைதியாக கண்டனம் தெரிவிக்கப்படும்

தோழர்காள்!
ஆர்வமுடன் எழுவீர்!
ஆதரவு காட்டுவீர்!
அமைதியோடு செல்வீர்!

பிஞ்சில் பழுத்தோர் பேச்சு!

தூத்துக்குடியிலே நாமெல்லாம் கூடி நமது பொதுக் குழுவை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், அரிப்பு எடுத்தவன் சொரிந்து கொள்வதைப் போல, சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டிருக்கிறார்கள், புதுக் கட்சித் தோழர்கள். புதிதாக என்ன பேசினர், புவிதிருத்தக் கிளம்பிய புலிகள், என்று கேட்டேன் வந்ததும், பெருங்காய மிருந்த பாண்டமதில் கொஞ்ச நாளைக்காயினும் வாசனை இருக்குமன்றோ! அந்தப் பெருங்குணம், கடுகளாவாவது இருக்காதபோனவர்களுக்கு, என்கிற எண்ணம் எனக்கு. சட்டிலுள்ளது அகப்பையில் வரும் என்கிற பழமொழிக் கொப்ப, தம் முடைய 'மூளை முதிர்ச்சி' எத்தகையது என்பதனை, முதற் கூட்டத்திலேயே, உலகுக்கு முரசொலித்திருக்கின்றனர் அவர்கள் !!

ஆலாய்ப்பறந்தனராம்-ஆபாச நடை பயின்றனராம்—அண்ணாவை இழிசொல் கொண்டு தாக்கி, இறும்பூதெய்தினராம். ஏச்சு இருக்கட்டுமய்யா எப்படியிருந்தது பேச்சு, என்று கேட்டேன், நமது ஏட்டின் நிருபரை! எதையோ பேச நினைத்து, எதையெதையோ கொட்டினராம். தெளிவில்லாத நெஞ்சங்களுக்குத் தெள்ளு தமிழ் எங்கிருந்து வரும்? பழைய இடமெனில், மேடையில் ஏறியதுமே, பள்ளும் தெம்மாங்கும் பாடியிருப்பர்! கொள்கையிருந்திருப்பின்குமுறிக் கொண்டு வந்து விழும் வார்த்தைகள் !!

உள்ளத்தையே உலைக்களமாக்கிக் கொண்டுவிட்ட பிறகு, உண்மைகளை மறைப்பதையே உயர்ந்த 'ராஜ தந்திரம்' என்று கருதுகிறபோது, தூய்மை எப்படி துவங்கமுடியும், இருதயத்தில். தூய்மை இலாதபோது, வாய்மை எங்ஙனம் வரும்? வாய்மையிலாதபோது, நா, அசையுமா! குழம்பிய குணாளர்களால், எப்படிப் பேச இயலும்? ஏசத்தானே முடியும் !!

அங்கே பேசியோரின் பேச்சினைக் கேட்டபோது மக்களுக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும்கலந்து வந்ததாம், அருவிபோன்ற ஆற்றொட்ட நடை எங்கே போயிற்று? கேலியும் கிண்டலும் கலந்து கிளம்புமே அந்தக் கிண்கிணி நாதத்தைக் கேட்க முடியவில்லையே ?—திராவிட முன்னேற்றக் கழகத்திலே இவர்கள் இருந்தார்கள்—அப்படித் தோன்றவில்லையே, விபூதி வீரமுத்துவின் படை வரிசையில் பல நாள் பயின்றோர் போலன்றோ உள்ளது —சேச்சே! சீக்கிரம் போனால் போதும் என்று, புதுக் கட்சித் தளபதிகள் பேசப்பேச, கூட்டம் கேட்க வந்த பொது மக்கள், வாட்டமுற்றனராம். அந்த அளவுக்கு, வகை வகையாக, தூற்றல் நடையும் ஏசல் பாணமும் எடுத்தெறியப்பட்டதாம் !!

இந்தப் போட்டியில், முதற் பரிசு பெற்றவர், மூன்று பத்து வயதும் முற்றுப்பெறாத, 'முது பெரும் அரசியல்வாதி! கோவைச் செழியனும். கொள்கையை விளக்கத்தெரியாத, இக் குளறுவாயர், நரகல் நடையினை நாவில் ஏந்தி; மக்களைப் பார்த்துக் கொட்டினாராம்! நாற்றம் கண்டோர், தூ! தூ! எனத் துப்பினராம்—மூக்கைப் பிடித்த வண்ணம், மூணுறு காதம் நடலாமே, முள் வேலி போலச் சூழ்ந்திருக்கின்றனரே காமராசரின் அரசு அம்புகளான போலிசார் என்று, போகவும் இயலாமல் இருக்கவும் சகிக்காமல் திண்டாடித் தினைத்தனராம். புதுக் கட்சி ஏதாவது பொன்மொழிகளை உதிர்க்கும் என்று வந்த பொதுமக்கள் கண்டார்களா, 'புண்' மொழிப்புலவர்கள் பேசப்போகிறார்கள் என்று! போதும், போதும் என்கிற அளவுக்கு புனிதமான தமிழின் பண்பினைப் பொசுக்கித் தத்தமது ஆற்றலையும் அதிமேதா விலாசத்தையும் காட்டிக்கொண்டனராம், புதுக்கட்சித் தளபதிகள் !!

புரட்சி—மாபெரும் புரட்சி—யாருமே செய்யாத புரட்சியினைச் செய்வது போலக் கருதிக் கொண்டு, அறிஞர் அண்ணாவை, 'அண்ணாதுரை' என்று அழைத்தாராம், ஆறடி உயரமும் அதற்கேற்ற மனவளமும் இலாத கோவைச் செழியன் எனும் குணவான்! என் வயதுக்கே, செழியனை, "ன்" விகுதிபோட்டு அழைக்கலாம். என்ன இலாபம் அதனால்? சிறிது நேரம் மன திருப்தி ஏற்படும். வேறென்ன கிடைக்கும். அரசியலை, இந்த அற்ப ஆசைக்காகப் பயன் படுத்துகிறவன், பலர் நலம் பேண வந்தவனாக முடியுமா? கர்த்தபம் கத்துகிறதே யென்று கருத்துள்ளவனும் மாறினால், கை கொட்டிச் சிரியாரோ, நல்லோர்! வேலை கண்ட இடம் ஊளையிடும் ஓநாய்களை மிஞ்சிடும் உயர்ந்த குணம், இந்த உத்தமர்களுக்கே, முழுச் சொத்தாக விளங்கட்டும்—நமக்கு வேண்டாம் !!

'அண்ணாதுரை' என்று, ஏதோ தானும் அவரும் சடுகுடுப் பருவ முதல் ஒன்றாகயிருந்தவர் போல ஓயிலாக அழைத்த செழியன், அதோடு, நிறுத்தவில்லை. தன்னுடைய ஆற்றலின் எடையினை அறிய வேண்டும் பாருங்கள், மக்கள்—அதனால், அறிஞர் அண்ணாவை, அப்பாவி யென்றும் அழைத்திருக்கிறார்! ஆணவ வாய் திறந்து, செப்பினாராம் செருக்குடன்,"அப்பாவி அண்ணாதுரை" என்று !!

அண்ணாவை அப்பாவி யென்றானா? எப்பாவி இப்படிச் சொன்னான் !!—என்று, இதயம் குமுறி எழவே செய்வீர்கள், நீங்கள். தலைவர் வெறும் அண்ணாதுரையோடு விட்டு விடுகிறார்—நம்முடைய தேசீயப் புகழை நிலை நாட்டிட இன்னும் ஒரு படி மேலே சென்றால்தான் ஊருக்குத்திரும்ப நமக்குத் தேவையான 'படியினை'ப் போடுவார்கள் என்று இந்தச் சகடக்கால் எண்ணியிருக்கிறது போலிருக்கிறது—நமதருமை அண்ணாவை, 'அப்பாவி' என்றழைத்து, ஆனந்தம் கொண்டிருக்கிறது !! இந்த அடாவடிக் கும்பலில், எப்படியோ சிக்கிக் கொண்ட பழம் தோழர் சென்னை கே. கோவிந்தசாமி, அண்ணாவை விளக்கும்போது, பழைய பாசத்தை மறவாத பண்போடு, 'அண்ணா' என்றிருக்கிறார். அவருக்குப் பிள்ளை வயதிருக்கும்; செழியன்,'அண்ணாதுரை' என்று அழைத்து, அதோடு, 'அப்பாவி' என்கிற அடைமொழியையும் இணைத்து, அழைத்திருக்கிறார், அண்ணாவை !!

'தமிழுக்குத் தும்பியப்பா' என்றார் தமிழறிஞர் சோமசுந்தரப் பாரதியார், 'வாதுக்கு ஒரு அண்ணாதுரை' என்று வயாரப் புகழ்ந்தார் சேதுப்பிள்ளையவர்கள் வரதராசனார் 'பேரறிஞர்' என்று இன்றும் பெருமையாகச் சொல்வார், ஆங்கிலம் கற்றோரும், தமிழ்மொழிப் புலவரும் அவரைப் போற்றுகிறார்கள்—இவர்கள் கற்றதில் கைம்மண் வினைக் கூடத் தொட்டுப் பார்த்திராத, இந்த உடுக்கு அடிக்கி, உத்தமர் உருவாம்—கருத்துக்களின் சுரங்கமாம்—காஞ்சி தந்த தங்கமாம்—எழுத்தாலும் பேச்சாலும் இந்நாட்டு வாலிபரைத் தட்டி எழுப்பிய சிங்கமாம்—சுயநலம்மற்ற வங்கமாம்—அறிஞர்க் கறிஞராம் அண்ணாவுக்குப் பங்கம் உண்டாக்கிவிடலாம் தன் பாழ்பட்டவாய் கொண்டு என்று வாரியிறைத்திருக்கிறார், சொற்களை! அண்ணா—மன்னியுங்கள் தோழர்காள், அண்ணா என்றால் அவர் தம் நா, அழுகிடாதோ?—அண்ணாதுரை, ஒரு அப்பாவியாம் !!

கோவைச் செழியனுக்கும், அவரைக்குத்திவிடும் சம்பத்துக்கும் கோவணங்கூடச் சரியாகக் கட்டத் தெரியாமலிருந்திருக்கும். அந்தக் காலத்திலே, குடும்பமா கொள்கையா எனும் போராட்டம் இழுக்க, குடும்ப நலனைவிடக் கொள்கையே முக்கியம் என்று அரசியலுக்குள் நுழைந்தவர் அறிஞர் அண்ணா. ஐந்தாறு மாடி வீடுகளுண்டு — அய்யா வீட்டுப்பிள்ளையென்கிற பெருமையுண்டு—அடிக்கப் பணமுண்டு-என்கின்ற நிலையிலே அல்ல! வயோதிக அன்னை—சிற்றன்னை, அன்பு மனைவி, ஆகியோரைக் காப்பாற்றும் பொறுப்புள்ள நிலையில். அடியெடுத்து வைத்தார் அண்ணா அரசியலில் பொப்பிலி

✲ எதிரேயிருப்பவர்களை ஏதோ காக்கை குருவி பூனை என்று பேச்சாளர்கள் மதிப்பிடலாகாது...அவர்கள்தான் எசமானர்கள் என்று எண்ணவேண்டும்...எண்ணினால் நாவடக்கம் ஏற்படும்...பொது வாழ்வு புனிதமாகும்... ✲

அண்ணல்

யும் பனகலும், நெடும்பலமும் செல்வமும், அழகிரியும் செட்டி நாட்டு அரண்மனையும், செழியன் கேள்விப்பட்ட பெயராயிருக்கும். அவர்களோடு, அரசியலில் இருந்து, அவர்கள் எல்லாம் பாராட்டும் பாங்கு பெற்றவர், அண்ணா- தலைவர் பெரியாரே, 'அறிஞர் அண்ணாதுரை அவர்களே!' என்றும், 'அண்ணா' என்றும் அழைத்துப் போற்றிடும் நிலையிலே, வளர்ந்தவர், அண்ணா பிறக்கவேண்டிய சமயத்திலே அண்ணாவுக்குப் பிள்ளைகள் பிறந்திருந்தால், இன்று செழியன், வயதிருக்கும்! அப்படிப்பட்டவரை, அரசியல் தெரியாத அப்பாவி என்று இந்த அப்பாவி சொன்னால், சிரிப்பதா! அழுவதா !! உலகமே ஒப்புக்கொள்கிறது ஆச்சாரியாரை சிறந்த மேதை யென்று—அப்படிப்பட்ட உலகத் தலைவர் சொல்கிறார். மனம் ஒப்பி, சிறந்த மேதை யென்று அண்ணாவை. தலைவராவதற்கு இடமும் வேளையும் கிடைக்குமா என்று தேடித்திரியும் இந்தச் சிறு கடுகு, செப்புகிறது பெருமலையை, அப்பாவி யென்று !!

அன்பா செழியா—ஒருவகையில் உன்னைப் போன்றோர் சொல்வதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உங்களைப் போன்ற எருக்கஞ் செடிகளை, எழில் மலராக்கிடலாம் என்று நம்பிய வகையில், அண்ணா ஒரு அப்பாவிதான். உங்களைப் போன்றோருக்கெல்லாம் முதுகெலும்பு போல இருந்து முன்னுக்கு வர உதவி, ஊக்கமளித்தாரல்லவா, அவர், அவ்வகையில் அறிஞர் அண்ணா ஒரு அப்பாவிதான். அரசியல் பெயரைச் சொல்லி நிதி வசூலித்து, 'எல்லாம் எனக்கு மக்கள் கொடுத்தது' என்று ஏமாற்றத் தெரியாத எங்கள், காஞ்சிக் கருவூலம் ஒரு அப்பாவிதான்-என்னைக் கொண்டுதானே இந்தக் கட்சிஏற்பட்டது; எனவே, நானே 'நிரந்தரத் தலைவன்' எப்போதும் லீடர்' என்று சொல்லாமம், சனநாயக முறையில் ஒரு இயக்கத்தை வளர்த்து, அங்கே நீங்களெல்லாம் வளரவும் வழியமைத்துக் கொடுத்தாரல்லவா? அப்படிப்பட்டவர், உண்மையில், ஒரு அப்பாவிதான்! அரசியலில் கிடைத்த செல்வாக்கை வைத்து 'ஐம்பதினாயிரமா இலட்சமா' என்று பேரமோ வியாபாரமோ பேசாமல், பிழைக்க எனக்குப் பேனா இருக்கிறது என்று தன்னை நம்பி வாழும் அவர், ஒரு அப்பாவி

(3-ம் பக்கம் காண்க)

2-ம் பக்கம் தொடர்ச்சி

கூட இல்லை! சம்பத்தின் மிக முக்கிய குற்றச் சாட்டுகளில் ஒன்று—கலை புகுந்து, கட்சியைக் கெடுத்துவிட்டது என்பதல்லவா? கண்ட காட்சி நேர்மாருயிருந்தது! பல சைகிள்களில், தலைவர்கள் படங்களோடு, எம். ஜி. ஆரும், எஸ். எஸ். ஆரும், கே. ஆர். ஆரும் பட ரூபத்தில் இருந்தனர். என்னவோ சிலர் சொல்லுகிருர்கள் என்பதற்காக எங்கள் இதயத்தில் நாங்கள் மதிக்கும் மாணிக்கங்களை இழந்து விடுவோமா, என்று சொல்வது போலிருந்தது, இந்தக் காட்சி. "என்ன இது, பைத்தியக் காரத்தனம்! ஏன்யா-, இவர்கள் என்ன அரசியல் தலைவர்களா—இவர்கள் படத்தை வைத்து இப்படியெல்லாம் போறலாமா," என்று என்கூட இருந்த தோழரை விட்டு ஒருவரிடம் பேச்சுக் கொடுக்கச் சொன்னேன்.

"ஏன்யா! அரசியல்னு என்ன, அது ஒருத்தருக்கு மட்டுமே சொந்தமா? அதைப் பேச ஈரோட்டுக் குடும்பம், விருதுநகர் குடும்பம், என்று பகுதி போட்டாவைத்திருக்கிறது. ஏன், இந்த நடிகர்கள் மட்டும் மனிதர்களில்லையா? இவர்களுக்கும் அரசியல் கொள்கை யிருக்கக் கூடாதா! "காசுடன், கனகுஷி" யாக வாழவேண்டிய நேரத்தில் எங்கள் கட்சிக்காகப் பாடுபடுகிருர்கள் என்பதால், இவர்களையும் நாங்கள் மதிக்கிறேம். உமக்கென்ன, குத்துகிறதா, குடைகிறதா" என்று கொஞ்சம் கோபத்தோடேயே கேட்டார், அத்தோழர். நான் அனுப்பியவர், திரும்பிவந்தார், 'சரி, போய், யாரிடமாவது திராவிடநாடா! தமிழ்நாடா!! என்று பேச்சுக் கொடுத்துப் பாரும்" என்று அனுப்பினேன்.

அவரும் போனுர். "அடபோய்யா! திராவிடநாடு ஏன் கேட்கிறேம்? எப்படிப்பட்ட திராவிடநாட்டை நாங்கள் கேட்கிறேம்? எதைத் திராவிடநாடு என்று சொல்கிறேம்? இங்கே வாரும் விளக்குகிறேன்!" என்று அவர், நான் அனுப்பியவரை அழைத்துக் கொண்டு போய், ஒரு மூலையில் வைத்து, விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். மக்களோடு மக்களாய் நின்று கொண்டு, அந்த விளக்கத்தைக் கேட்ட போது, கழகத் தோழர்களுக்கிருக்கும் இவ்வளவு தெளிவு, சம்பத் குழாத்துக்கு இல்லாமல் போனதேன், என்று ஆச்சரியப் பட்டேன்.

அத்தோழர், சொன்னுர், "இந்தாப் பாரய்யா! ஏன்யா திராவிடநாடு கிடைக்காது- இதோ, பார் நீ சொல்ற தமிழ்நாடும் அமைய வேண்டும், அதோடு திராவிடநாடும் அமையவேண்டும்என்கிறதுதான், எங்க கொள்கை. என்னய்யா முழிக்கிறே? நான் சொல்றது புரியலியா ... தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட தனிநாடு, மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்ட தனியரசு...கன்னட மொழியினரின் கர்நாடகம்... தெலுங்கு மொழியினரின் ஆந்திரம்...இப்படி நான்கு அமைப்புகள் அமைய வேண்டும். இப்படி அமைந்த அமைப்புகள்நான்கும், தங்கள் பொதுப்பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள ஒரு கூட்டாட்சி அமைத்துக் கொள்ளும்...கூட்டாட்சி என்ருல், இப்போதிருக்கிற டில்லிபோல என்றெண்ணுதீர். டில்லியிலே விவசாய மந்திரி யென்ருல், மாகாணத்துக்கும் ஒரு விவசாயமந்திரி—அங்கே ஒரு நிதி மந்திரியென்ருல் இங்கேயும் ஒரு நிதிமந்திரி அங்கே ஒரு கல்வி மந்திரியென்ருல் இங்கேயும் ஒரு மந்திரி என்றல்லவா, இப்போது இருக்கிறது. அப்படிப்பட்டது அல்ல, நாங்கள் சொல்கிற திராவிடநாட்டுக் கூட்டாட்சி. அந்தந்த மாநிலங்களின் ஆட்சிகளை, அந்தந்த மாநிலங்களே, ஆளும். ஆனுல், அவை தவிர்த்து, தென்னுட்டிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும் பொதுவாக உள்ளப் பிரச்னைகள் இருக்குமல்லவா, அதைப்பற்றி, திராவிடப் பொதுச்சபையின்குழுவினர், தீர்மானிப்பார்கள்..." என்ருர் அத்தோழர். நான் அனுப்பியவர் கேட்டார், "அப்படியென்னய்யா பொதுவாகப் பிரச்னைகள் இருக்கப் போகிறது?" என்று அதற்கும் அவர்பதிலிறுத்தார்". ஒன்றை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். எவ்வளவுதான் இந்தியா ஒன்று என்று பேசினுலும், ஆந்திராவை விட்டு, பம்பாய்க்குள் நுழைந்தால் உணவு, உடை, முதலியவைகளில் முக்கிய மாற்றத்தைக் காண்கிறேம். பழக்கவழக்கங்களில் கூடக் காண்கிறேம். எப்படி விஜயநகர வேந்தர்கள் குமரிவரையில் ஆண்டனரோ; அதேபோல, சோழநாட்டு வேந்தர்கள் கலிங்கம்—அதாவது ஒரிசாவின் எல்லைவரையில்ஆண்டனர். சேரநாட்டு மன்னர்களுக்கும் சோழ பாண்டியர்களுக்கு மிடையில், உறவு இருந்ததுதான் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாச்சே!! இப்படி, இந்தப்பகுதிகள் யாவும்; ஒரே மொழியிலிருந்து பிரிந்தவை என்பது மட்டுமின்றி நீண்ட நாட்களாகப் பலவழிகளிலும் தொடர்பு கொண்டவையாகும். மொழித்துறை, அரசியல் துறைகளில் மட்டுமின்றி இந்த நான்கு பிரதேசங்களும் ஒன்றையொன்று சார்ந்து வாழவேண்டிய பொருளாதார அடிப்படையும் இருக்கிறது...அது எப்படி என்கிருயா! இதோ பார்...தமிழ்நாட்டுக்கு வேண்டிய தண்ணீரைக் காவிரி தருகிறது; அது கிளம்புவதோ, கன்னடத்தில். பாலாற்றில் நீர் வேண்டுமென்ருல், கன்னடத்தின் உதவி, தேவை. அதேபோல, ஆந்திரத்திலுள்ள கிருஷ்ணு கோதாவரி ஆறுகளின் நீரைக் கொண்டுவந்தால், செங்கற்பட்டுக்கும் சென்னைக்கும் நன்மை கிடைக்கும். கேரளத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரும் ஆறுகளின் நீரும், நமக்குத் தேவை. இந்த வகையில், நமக்கு, ஏனைய பிரதேசங்களின் ஒத்துழைப்பு வேண்டும். அதேபோல, தமிழ்நாட்டில் கிடைக்கும் நெய்வேலி நிலக்கரி, எல்லாப் பிரதேசங்களுக்கும் தேவைப்படும். மலையாளத்துக்கு வேண்டிய அரிசியை, நாம்தான் அனுப்ப வேண்டும். மலையாளத்திலிருந்து ஏலம், கிராம்பு, இன்னும் பலகனிப் பொருள்கள் நமக்குத் தேவை. இப்படி, ஒன்றையொன்று நம்பி வாழவேண்டிய நிலையிலிருந்து, இந்த நான்கு பகுதிகளும் தப்பி விட முடியாது.

முக்கியமாக தென்னுடு, விவசாய பூமி. அந்த விவசாயத்துக்குத் தேவையான நீர்ப்பாசனம் பற்றி, நமக்குள் நல்ல ஐக்கியம் வேண்டும் ... அந்த விவசாயப் பொருள்கள் அதிகம் விளையும் இடங்களும், விளையாத இடங்களும் நான்கு பிரதேசங்களுக்குள்ளும் உள்ளன......அவை, பகிர்ந்து கொள்ளப்பட்டு, மீதமிருப்பவைகளையும், கைத்தறி கோவைத்துணி போன்ற உற்பத்திப்பொருள்களையும், தேவைக்குத் தக்கபடி பகிர்ந்துகொண்டு, மிச்சத்தை வெளியிடங்களுக்கு அனுப்ப நமக்குள் ஒரு வர்த்தக ஒப்பந்தம் இருந்தேஆகவேண்டும் இதோபார்! இந்த நான்கு பகுதிகளையும் போல, கடல்வசதி உள்ளதுஅல்ல வடக்கு. கேரளம் தமிழகம், ஆந்திரம், மூன்று பகுதிகளுக்கும் சொந்த மான துறைமுகங்கள், ஏராளம் உள்ளன! இவைகளையொட்டி, வெளிநாட்டு வியாபாரம், நன்கு நடக்குமென்பதால், இத்துறையில் நான்கு பகுதிகளுக்குமிடையே, ஒருநட்புறவு இருந்தேயாக வேண்டும். இதேபோல கடற்படையும், விமானப்படையும், இராணுவமும் பொதுவாக இருக்கலாம்...இந்தப் பொதுப் பிரச்னைகளை மட்டும் கவனிக்கக் கூடியதாக ஒருஅமைப்பு இருக்கும்! அந்த அமைப்பின் பெயர் 'திராவிடநாடு' என்ருல் என்னதப்பு..." என்னய்யாதப்பு.. என்று கேட்டார், அத்தோழர்.

அதுசரி! இது, சாத்யமா?' என்று, எதிர்கேள்வி போட்டார் நான் அனுப்பியவர். அவருடைய வாயைக் கிண்டத்தான்! "ஏன் சாத்தியமில்லை! இதோ பார், நீ சொல்கிறபடி தமிழ்நாடே டில்லி ஆட்சியிலிருந்து பிரிந்து அமைவதாக வைத்துக் கொள்...அப்படிப் பிரிந்து அமைந்தாலும் பம்பாயோ, வங்காளமோ தொடர்பு கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனுல் உன்னைச் சுற்றியுள்ள இந்த நான்கு சகோதரப் பகுதிகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல், ஒருவரும் சுகமாகயிருந்துவிடமுடியாது...அப்படியே நீ சொல்வது போல், தமிழ்நாடுகிடைத்தாலும், அதற்குப்பிறகு அமைய வேண்டிய ஒரு கூட்டுத் தொடர்பைப் பற்றிப் பேசுவது எப்படித் தவறு? காலணுவேண்டும் என்று கேட்கிருய் நீ! ஓரணு வேண்டும் என்கிறேம், நாம்!! ஓரணு கேட்பதால் உனக்கென்ன நஷ்டம்? நான்கு காலணுக்கள் கிடைத்திடினும் ஓரணுதானே. அப்படி ஒன்ருகயில்லாமல், ஒரு தெலுங்கர் தமிழ்நாட்டில் இல்லாமல் செய்வோம், மலையாளிகளை அடித்து விரட்டுவோம், கன்னடத்தைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவோம், என்று நீ சொல்ல முடியுமா...... ஒன்றை நீ புரிந்து கொள்ள வேண்டும். ஏக இந்தியாதான் கேட்டார், காந்தியார். பாதி இந்தியா கிடைத்தது. பாதி இந்தியா கொடுக்க முடியாது! பாகிஸ்தான் கூடாது!! என்று அன்று பலர் எதிர்த்ததால்தான், ஆண்டு பதினைந்தாகியும், இன்னும் பாகிஸ்தானுடன் ஒத்துவாழ முடியாமல், இந்தியா அவதிப்படுகிறது. அந்த மனுேபாவத்துடன், ஆந்திரர் என்ருல் அடி, கன்னடம் என்ருல் கைலாகு தராதே, மலையாளிகளை விரட்டு என்று வேறுபாடுமைகளை வளர்த்து விடுவதற்கும்; இந்நான்கு பகுதிகளும் சகோதர பாவத்துடன் வாழலாம், அவரவர் பகுதியைஅவரவர் ஆளலாம், அதோடு ஒரு பொதுத் தொடர்பும் கொண்டு நம்முடைய தென்னகப் பிரச்னைகளை ஒற்றுமையுடன் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஒருமைப் பாட்டைப் போதித்து வருவதற்கும் வித்தியாசம் இல்லையா? வேற்றுமைகளால் மனிதன் வாழவிரும்புவதைவிட, ஒற்றுமையை விரும்பி அதற்காகப் பாடுபடுவது எப்படித் தவருகும்? இப்படியொரு அமைப்பு, ஏற்படுவது, ஏன் சாத்தியமாகாது. எதுவும் சாத்திய மாகும்" என்ருர், அத்தோழர், ஆவேசத்துடன்.

"உண்மைதான்! ஒற்றுமையுடன்; இந்தப் பகுதிகள் வாழக் கூடியவைதான். ஆனுல், இந்த நன்னுேக்கம்பற்றி, பிறபகுதிகளில் பேசியிருக்கிறேமா? அவர்கள்தான் ஒப்புக் கொள்வார்களா"? என்று கேடடார், நான் அனுப்பிய தோழர், அப்போது, அவருக்கு வந்த ஆத்திரத்தைப் பார்க்க வேண்டுமே! "ஒப்புக் கொள்ளும்படிச் செய்ய வேண்டியது, யார்-அவர்களுக் கெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டியது யார்-திராவிடநாடு எனும் குழந்தையைப் பெற்ருர், பெரியார்; அவரும் கால்பகுதி வழியிலே காமராசரே கதி என்று போய்விட்டார்—அவரது அண்ணன் பிள்ளை அரைப்பகுதிவரையில் வந்தார்; அவரும் போகிருர், ஏதோ ஆசைால். யார்மீதுய்யா பிசகு? இப்படி வளர்த்தவர்களே, குழந்தையைக் குத்த ஈட்டி கொண்டு பாய்ந்தால், இதைப் பார்ப்பதா? அல்லது, இந்த நேரத்தைக் கொண்டு ஏதாவது முயற்சி செய்திருக்கலாமேஎன்று எண்ணி நோவதா? என்று உனக்குத் தெரியுமாய்யா! இந்த ஈ. வெ. கி. சம்பத்தை அனுப்பினுேமே, டில்லிக்கு. அங்கே அவருக்கு மராத்தியத் தலைவர்களைப் பார்க்க நேரமிருந்ததாம்—வங்காளத் தலைவர்களோடு உரையாட முடிந்ததாம்—அசாமியரின் பிரதிநிதிகளோடு பேச முடிந்ததாம்—அப்படிப்பட்டவர், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மலையாளிகள், கன்னடியர், ஆந்திரருடன் அந்தப் பகுதியிலிருந்து வந்திருக்கும் பார்லிமெண்டு உறுப்பினர்களுடன் தோழமை கொண்டு அத்தோழமையின் மூலம் ஏன் கொள்கைகளைப் பரப்பி, ஆதரவு தேடக்கூடாது? இங்கே என் நண்பர் ஒருவர், காங்கிரஸ். நட்பைப் பயன் படுத்தி, அவரிடம் கொள்கையைச் சொல்லி, நைசாக அவரை இன்று கழகத் தோழர் ஆக்கியிருக்கிறேன்! இப்படி எங்கள் சக்திக்கு ஏற்றபடி நாங்கள் பணிபுரியும்போது, இந்த சம்பத் மட்டும் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கொண்டு இதுபோன்ற முயற்சிகளை ஏன் செய்திருக்கக்

கூடாது. என்னமோய்யா, போ! செய்யவேண்டியவர்கள், செய்ய வேண்டியதைச் செய்யாமல், சிந்து பாடவும் சந்துப் பேச்சுக்கு ஓடவும், அதைச் சகித்துக் கொண்டு நாங்கள் கிடக்கவும் ஆளாகிக் கிடந்திருக்கிறோம். செச்சே! அசிங்கமான ஆட்கள்!!'' என்றார். அவருடைய வேகத்தையும், விவேகம் கலந்த விளக்கத்தையும் கேட்டபோது சம்பத்தின் விலகல் பற்றியோ, அவர் திராவிட நாடு பகற் கனவு என்று சொன்னது பற்றியோ, கழகத் தோழர்கள் ஏன் கொஞ்சமும் கவலைப்படவில்லை என்பது தெரிந்தது.

அந்தத் தோழரை அணுகி, "யார்?'' என்று கேட்டேன். என்னை, அவர் புரிந்து கொண்டதும், அந்தக் கண்களில் அன்பும் பாசமும் ஓடிவந்தது!'' எனக்குச் சாத்தூரண்ணா. என் பெயர் ஆறுமுகம். காபி ஓட்டலில் வேலை செய்கிறேன்'' என்றார். எனக்கு இன்னும் வியப்பு அதிகமாயிற்று! ஓட்டலில் வேலை செய்கிறவர்—அவருக்குப் புரிகிறது, தெளிவு தருமளவிக்குத் திராவிட நாடு பற்றிப்பேச!! ஆனல், அவர் போன்ற தோழரெல்லாம் போற்றிக் கொண்டாடிய சம்பத்துக்கு திராவிட நாடு பகற் கனவாயிருக்கிறது—பலிக்காதது என்று பேசச் சொல்லியது.

அந்த இடத்தைவிட்டு, நகர்ந்து பொதுக்கூட்டம் நடந்த இடத்துக்கு வந்தோம். வ. உ. சி. யின் பெயரால் அமைந்த அந்த மைதானம் முழுதும், அடடா, எவ்வளவு மக்கள்! ஏசுகிறார்களே, இதனல்தான் உங்கட்கு மக்கள் கூடுகிறார்கள் எனப் பேசுகிறார்களே அப்படிப் பட்டக் கலைஞர்கள் யாரும, வரவில்லை. இருந்தும் மக்கள் வந்திருந்தனர் என்பதை எண்ணும்போது, எனக்குத் திருவாரூர் மாநாடு கவனத்துக்கு வந்தது.

[அடுத்த இதழில் முடியும]

(3-ம் பக்க தொடர்ச்சி)

தருவதாகும் என்பதில் ஐயமில்லை கருத்து வேற்றுமைக்கு இடந்தராத நாடு இயற்கை வழி வளர்ச்சி பெறுதல் அரிது. அதைச் சிறை நாடு என்று கூறல் மிகையாகாது. கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் நாடே இயற்கை வழி வளர்ச்சியுறும், கருத்து வேற்றுமை வளர வளர உண்மை விளங்கிக் கொண்டே போகும். இது பற்றிய விரிவுரை ஈண்டைக்கு வேண்டுவதில்லை.

'திராவிட நாட்டால்' நற்பயன் விளையு மென்று எதிர்ப்பார்க்கிறேன். இப்போது நாட்டை அரித்து வரும் வகுப்புவாதம், சாதிப்பிணக்கு, கண்மூடி வழக்கவொழுக்கம் முதலியவற்றை நீறு படுத்தும் என்று நினைக்கிறேன்; மக்களை ஒருமைப் படுத்தித்தோழமையைப் பெருக்குமென்று நம்புறேகின்.

6-ம பக்கத் தொடர்ச்சி

தான்! வாரத்தில் ஆறு இரவுகள் கண்விழித்து "திராவிடநாடு'' 'ஹோம்லேண்டு' எனும் ஏடுகளுக்கு எழுதி, அந்த வருவாயைக் கொண்டு குடும்பத்தேரை ஓட்டிக் கொண்டு ஒரு புதிய கார் கூட வாங்கிக் கொடுக்குப்படிக் கட்சியைக் கேட்காமல், கட்சியே கொடுத்தாலும் மறுத்துக் கொண்டு, தன்னையும், தன் சுகத்தையும் பரித்தியாகம் செய்து கொண்டு பாடுபடும் எங்கள் பாசமலர், அப்பாவிதான் செழியா, அப்பாவிதான் அரசியலில்! இல்லையென்றல், ஆலமரம் போலாகி, தன் நிழலில் யாருமே வளராமற் செய்திருக்க மாட்டாரா—நான்மட்டுமல்ல, ஐவர் தி. மு. க. தலைவர்கள் எனும் நிலைமையை உண்டாக்கிவிட்டு, தனக்கிளையவர்களைத் தரணிபுகழக் கேட்டு மகிழ்ந்திருக்குமா கழகம் எக்கேடு கெட்டாலுஞ் சரி, டில்லியில் போய்ச் சொல்லிச் கொள்வேன் கட்சியின் 'சேர்மன்' என்று அந்த வகையில் அவைத் தலைவர் பதவி வேண்டும் என்று ஈரோட்டு இளவல் கேட்ட போது 'இதானேடா! இந்தா! உன் கீழ் நான் பொதுச் செயலாளனகயிருக்கிறேன்! என்று அப்பாவியாகயிலாதிருந்தால் ஒத்துக் கொண்டிருப்பாரா. உன்னையெல்லாம் பெரியமனிதன் என்று ஊர் சொல்லச் சகித்துக் கொண்டதோடு மட்டுமின்றி, அதுவேதான் பெறும்பேறு என்று கருதியவரல்லவா? அவருக்கு, இப்படிப்பட்ட பரிசைக் கொடுத்தால்தான், அரசியலில் வேட்டைப் புலிகளும் காட்டுக் குணங்களும் உள்ளன என்று உலகம் தெரிந்து கொள்ளும்.

அரசியல், உனக்கு, அவர்தந்த பிச்சை! பிச்சையிட்ட பெருங் குணவானைப் போய் அப்பாவி என்று நீ அழை-நன்றகச்சொல் வாய்வலிக்க அவரை அவமானப் படுத்து—அப்போதுதான், உன் தரம் தெரியும்-உன்னை இந்த அளவுக்குத் தூண்டிவிட்ட தோழர் சம்பத்தின் தரத்தையும், நீங்கள் ஆரம்பித்திருக்கிற கட்சியின் எதிர்காலத் தரத்தையும், நாடு எடை போட்டுப் பார்க்க இயலும் !!

நந்தியா வட்டமலரின் அருமையினை நாயார் அறியார் ! நல்லோர் அறிவோம்!! மலரை, மலம் என்பீர்--நாடு, அதுகண்டு நகைக்கட்டும்--இந்த நற்றமிழ் வாயர்கள் பரப்பிடும் நாற்றமதைப் பாரீர் என்று சொல்லிச் சிரிக்கட்டும்--இயேசுநாதருக்கு ஜூடாஸ் கிடைத்தான்--எங்கள் அண்ணாவின் பெருந்தன்மையை, கலங்கரை விளக்கமாக்கிக் காட்ட பேசு, நண்பனே, நீ, பேசு! கூச்சப்படாமல், வீசு----எந்தளவுக்கு உன்னல் முடியுமோ, அந்தளவுக்கு உரத்தி, உரத்தி, ஊரெங்கும் போய்ப் பேசு !!

அப்போதுதான் உங்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்—அப்போதுதான் எம் தலைவர் சொன்ன சடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மும்பெரும் முழக்கத்தைக் கொண்ட எமது கழகத்தின் பெருமையும் இன்னும் பளிச்சிடும் பட்டி மலர்ந்திடின் அருகே பாரிசாத மலரின் பெருமை இன்னும் அதிகமாகுமன்றே! அதிகமாகட்டும் எமது அறிஞர் புகழ்--நீ அஞ்சாதே—பேசு! பேசு!!

ஓதி பெருத்து உத்திரத்துக்கு ஆகுமோ—நன்னெறி அறியாதவர்கள் வந்தோ நாளைக்கு அரசியலை நடத்திக் கிழிக்கப்பவர்--மதி கெட்டதுகள் வளர்ந்தால் கதி கெட்ட இம்மண்ணின் இழிவு இன்னுமன்றே வளரும், வளரும் என்பதை இந்நாட்டு மக்கள் அறிந்துகொள்ள அங்கும், இதே போல் பேசுங்கள்! அம்போது தான், மக்கள் சொல்வார்கள் பார்த்தீரோ இதுகளை! தி. மு. க. விலிருந்தபோது எப்படி யிருந்தார்கள்! இன்று ஏன் இப்படிப் பேசுகிறார்கள்? என்று அப்படிக் கேட்கும்போது யாரும் சொல்லாமலே உலகம் பேசும் பூவோடு சேர்ந்ததால் நாறும் மணம் பெற்றது முன்பு! இப்போது நாறின் நாற்றம் நன்றகத் தெரிகிறது!!—என்று.

களர் நிலத்தில் விழுந்த நீர், அந்நிலத்தின் குணத்தைத்தான் பெறும். சேர்ந்த இடம் எதுவோ அதே சுபாவம்தான் சேர்ந்ததுக்கும் வரும். அரும்பு கோணிடில் அதன் மணம் மாறுது — கரும்பு கோணிடிலும் சுவை குறையாது. இரும்பு கோணிடின், அடித்துச் சரி செய்துவிடலாம்—நரம்பு கோணியவர்கள் நீங்கள், கொள்கை யெனும் நரம்பு—உங்களை எதுவும் செய்ய இயலாது? வயலில் கிடக்கும் கொட்டிக்கு வாசமிடல் இயலுமோ? மலம் நாடிடும் வண்டினைச் சீர்திருத்தவும் இயலுமோ!! சுபாவம், அப்படி.இங்கேயிருந்த நாள் வரையில், எங்களுக்கு ஏளனம் தேடித் தராத வகையில், இந்தச் சுபாவம் அடங்கிக் கிடந்ததே, அதற்காக ஆயிரம் நன்றிகள், உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம்.

நேற்று வரையில் நெத்திலிக் குஞ்சுபோல் கிடந்தது இன்று நெஞ்சுருக்கும் மலராகிவிட்ட தென்றல் நம்ப ஆள் வேண்டாமா? அரசியல் கொள்கை பிக்கவில்லை என்றுடி இவர்கள் போனதால்' திடீரென உயர்ந்து விடுவாரோ!!

முதல் நாளிரவு வரையில், அறிஞராயிருந்தவர், மறுநாள் காலையில் அப்பாவியாகவா ஆகிவிடுவர்? புதுக்கட்சி அமைத்தோர், 'கிடைத்த வசதிகளால் பூரிப்படைந்து ஒரே இரவில் உயர்ந்தோராகவே ஆகியிருக்கட்டும்! அதனல் என்ன? அண்ணாவை, அண்ணாதுரை என்று அழைக்கின்ற அளவுக்கு வயோதிகமுமா வந்துவிடும்! உண்மை-என் வயது எழுபது—இதோ பாருங்கள் என்னைப் போலவா அண்ணாதுரைக்குத் தலை நரைத்திருக்கிறது பாருங்கள்--நான் அவரை 'என்னடா! வாடா!! என்று அழைக்காமலிருப்பதே என் பெருந் தன்மையால்---எனச் சம்பத் சொன்னல், பித்தம் கேசத்தை மட்டுமல்ல உள்ளத்தையும் ஊடுருவிச் சென்று அமர்ந்துவிட்டது போலிருக்கிறது என்றுதானே மக்கள் கூறுவர்.

வயது அதிகமாகும், வழக்கப்படி---ஆனல் புதுக் கட்சிப் புணிதர்களின் போக்கில் ஒவ்வொரு நாளும் அண்ணாவின் வயது குறைகிறது—சம்பத் 'அண்ணாதுரை' என்றார். செழியன் செப்புகிறார்—இப்படிப் புதுக் கட்சியிலிருப்போர் ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். அதோடு விட்டார்களா? கருத்துக் குருடர்—காமச் சுவை எழுத்தாளர் — அரசியலே தெரியாதவர் — கோழை — இப்படி வளர்ந்து, கடைசியில் அப்பாவி என்கிற பட்டம் சூட்டப்பட்டிருக்கிறது.

'சரிய்யா! அண்ணாதுரை ஒரு அப்பாவிதான்! அந்த அப்பாவி வளர்த்துவிட்ட நீங்கள் மட்டும் யாராம்?''என்று எண்ணாரோ மக்கள்? அண்ணாதுரை யில்லாமல் அதுகள் எங்கிருந்து வந்ததுகள் என்று கேளாரோ!

அறிஞர் என்று அழைக்கமாட்டேன் என்று விலகிச் சென்ற 401 பேர் அழைக்காததால் அப்பாவி என்று அழைப்பதால் மறுநாளே அண்ணாவின் படிப்பெல்லாம் பறந்துபோய் ஏதுமறியாதவருகவா ஆகிவிடப்போகிறார்? ஒரு நாளுமில்லை! விலகிய 401 ன்னும் விற்பண்னர் என்று சொல்லாததால், அவர் ஒன்றும் செல்லாத கசாகிவிட மாட்டார். அதே சமயம்' அவரைத் தத்தம்இருதயத்திலே போற்ற நான்குலட்சம் கழகத்தோழர்கள் இருக்கிறார்கள். புது நெறி வகுத்துக் கொடுத்த புனிதரை-அகிம்சை வழியில் அண்ணல் காந்தியடிகளுக்கு அடுத்த இடத்திலிருப்பவரை -- எழுத்துலகின் வேந்தரை-கலையுலகின் காவலரை-பேச்சுலகின் பொற்றுமரையை-பெரியவர் சிறியவர் எனும் பேதமிலாது பழகும் பெருமைக்குரிய தலைவரை-—சீமான்களின் ஓய்வு மடமாகயிருந்தஇயக்கத்தை ஏழைக்குடிசைகளுக்குக் கொண்டு வந்தவரை-சுயமரியாதைச் சுடரை கேட்டார் பிணிக்குந்தகைறவாய்க் கோளாரும் வேட்பமொழியும் சொல்வலாரை--நடமாடும் பல்கலைக் கழகத்தை-—இளைஞர்தம் நெஞ்சந்தோறும் படமாடும் பைந்தமிழ் காவியத்தை-பலதுறையும் அறிந்த நல்லறிவாளரை-புத்தகப் பூங்காவை—புதுயுகச் சிற்பியை ஒரு புழு, எள்ளி நகையாடுவ தென்றல், பூச்சிக்கடித் துப்பிடும் பூவரசம் இலைத்துண்டு, துள்ளிக் குதித்து, இல்லாதவார்த்தைகளை அள்ளி இறைப்பதென்றல், எதை நாம் நோக முடியும்! இந்தக் கேடு கெட்ட நிலைக்கு' நம்மோடு இருந்ததுகள், வேகமாக ஒடுசின்றனவே என்று வேதனைப்படுவதைத் தவிர, வேறென்ன செய்ய இயலும் நாம் !!

கொள்கையைப் பேசினல்,
அரசிபல், எனலாம்.
குறுமதியைக் கொட்டவே யாம் எனில்,
என் செய இயலும் !!

சம்பத்தின் போக்கும், அவரது குழாத்தின்குறிக்கோளும் அறிஞர் அண்ணாவை, எள்ளிநகையாடி ஏளனப் படுத்துவதென்றே தோன்றுகிறது.

இதுதானே பெரியாருக்கு இனிக்கும்! காமராசருக்கு, களிப்பூட்டும்!!

* * *

காதல் திருப்பம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவன் நெஞ்சம் சிறிது நேரம் இன்பநாதம் எழுப்பி ஓய்ந்தது.'' கமலாவிற்குத் தன்மேல் பிறந்த ஏதோ ஒரு பாசத்தின் பரிவு இது'' என அவன் எண்ணமிட்டான். மேலும் அவள் அந்நீரைத் தரும் போது அவளுடைய மென்விரல்கள் அவனுடைய விரல்களோடு இலேசாக உராய்ந்தன. அந்த ஸ்பரிசம் அவன் உடலெங்கும் ஒருவகை மின்சாரத்தைப் பாய்ச்சிற்று. அதுமுதல் கமலா அவன் கண்களுக்கு அழகுமங்கையாகக் காட்சியளித்தாள். அவள் அவன் அருகில் வரும்போதும், போம்போதும் அவன் நெஞ்ச அலைகள் எழுந்து ஓய்ந்து கொண்டிருந்தன.

இந்த இன்ப நினைவால் அவன் உடலில் ஒருவித தெம்பு பிறந்தது; உடல் சிறிது உரம் பெற்றது. இரண்டு நாட்களில் அவன் வீடு செல்ல அநுமதி தந்துவிட்டார்கள். அன்று தங்கவேலு கட்டிலில் மல்லாந்து படுத்தப்படியே ஏதோ ஒரு பாடலை இசையோடு முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அந்த நேரம் கமலா அங்கு வரும் நேரம் என்பதை உணர்ந்து தானே என்னவோ அவன் பாடிக்கொண்டிருந்தான். அங்கு வந்த கமலா "என்ன மிஸ்டர் தங்கவேலு. ஏது? தாங்கள் இனிமையாகப் பாடுவீர்கள் போலிருக்கிறது. உடல் நலிவை மறக்க இசையும் ஓரளவுக்குப் பயன்படக் கூடியதுதான்'' என்றாள். இந்தக் கேள்வி தங்கவேலுவிற்குத் தன்னையறியாத ஓர் பூரிப்பைத் தந்தது.

"ஆமாம். இனிமையான பாடல் மட்டுமல்ல, வீணை யென்றால் எனக்கு ஒரே வெறி. நாள் முழுதும் வீணையின் கானத்திலேயே மெய் மறந்திருப்பேன். தங்களுக்கும் பாடத் தெரியுமோ' என்றான் தங்கவேலு. "ஓ! அப்படியா? உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. ஆண்டவன் வீணையிலிருப்பதில்லை; வியர்வையில்தானிருக்கிறான். பாருங்கள்— உழைத்து, விதைத்துப் பாடுபட்டால்தான் கதிரறுக்க முடிகிறது. வியர்வையின் விளைவல்லவா அந்தக் கதிர். கதிர் ஆண்டவன் நியதியல்லவா? மேலும் குழந்தை பிறக்கும் போதே சலனத்தோடல்லவா பிறக்கிறது; சலனமற்ற குழந்தை உயிரற்ற குழந்தையல்லவா? மக்கட் பிறவி உழைப்பதற்குத்தான். அந்த உழைப்பை ஆற்றும் தென்றலாக, நான் வீணையை நினைப்பவள். வியர்வையைச் சிந்துவதில்தான் எனக்கு ஆறுதல்'' என்றாள் கமலா. அவளுடைய இந்தப் பதிலைக் கண்டு தங்கவேலு தடுமாறினான். மேற்கொண்டு என்ன பேசுவதென்றே அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. பிறகு தங்கவேலு திரும்பிப் பார்த்தபோது கமலா அங்கில்லை. அவள் எப்போதோ அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாள்.

இந்த உரையாடலுக்குப் பிறகு அவர்கள் ஏதோ மிக்க நெருக்கத்திலிருப்பதாக நினைத்தான் தங்கவேலு. அவளுடைய கருத்து நிறைந்த சொல்லோவியம், பயன் கருதாத பணி இத்தனையும் அவன் உள்ளத்தில் ஆழப்பதிந்து விட்டன. "ஏன்...கமலாவையே நாம் கல்யாணம் செய்து கொண்டால்...'' என நினைத்தான்; சிறிது திகைத்தான்; அவளையே கேட்டுப் பார்த்துவிடுவதென முடிவு கட்டினான்—ஆனால் அந்நிகழ்ச்சிக்குப் பின் அவன் கமலாவைக் காணவில்லை. அன்று மாலையே ஏதோ ஓர் அவசர அழைப்பில் கமலா தன் ஊர் சென்றுவிட்டாள் என அறிந்தான்.

* * *

தன் மகன் நல்ல நிலையில் தேறி வந்தது காண செட்டியாரின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. இதற்கு முன் இருந்த பாசப் பிணைப்பைவிட இப்போது மகனிடம் அவர் அதிக அன்பு செலுத்தினார். 'நல்லபடியாக அவன் வீட்டோடு உலவிக் கொண்டிருந்தாலும் போதும். அதுவே தான் பெறற்கரிய பேறு' என்று அவர் கருதினார். இந்த நிலையில் நாட்கள் பறந்து கொண்டிருந்தது. முன் பெல்லாம் எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருப்பவன் இப்போது கலந்துரையாடுவதையே நிறுத்திக் கொண்டான். ஓடியாடி இயங்கிக் கொண்டிருந்தவன் ஓய்ந்து சிந்திப்பதிலேயே பெரும் பகுதியை செலவிட்டான்.

அ. ஏகாம்பரம்

தங்கவேலுவிற்கு எப்படியும் திருமணத்தை விரைவிலேயே முடித்துவிட வேண்டுமென எல்லா ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்ய ஆரம்பித்தார் செட்டியார். தன் ஒரே மகனுக்குச் செய்யப்படும் திருமணத்தை மிக்க சிறப்பான முறையிலேயே நடத்தத் திட்டமிட்டார். "அடக்கமான பெண்ணாக இருக்க வேண்டும்; அதே நேரத்தில் அழகாகவும் இருக்கவேண்டும்; குடும்பத்தில் ஒன்றிப் பழகத் தெரியவேண்டும்; குடும்பக் கலகம் இன்னதென்றே தெரியாத பெண்ணாக இருக்கவேண்டும்'' என்ற பல அடிப்படையிலேயே செட்டியார் பல பெண்களைப் பார்த்தார். இறுதியாக ஒரு நல்ல இடத்தில் பெண் பார்த்து நாளும் குறிப்பிட்டுவிட்டார். இதனை யறிந்த தங்கவேலு நெஞ்சம் குமுறினான்; தன் தந்தையை நொந்தான்.

என்னதான் தந்தை மகன் என்றாலும் என் திருமணத்திற்கு என்னைக் கூடக் கலக்காமல் ஏற்பாடு என்ன வாழ்கிறது'' எனச் சலித்துக்கொண்டான். இருந்தாலும் நேர்முகமாகத் தன் தந்தையைக் கேட்கும் துணிவு ஏற்படவில்லை. இயற்கையாகவே சிறு வயதிலிருந்தே தன் தந்தையிடம் பேசுவதில் அவனுக்கு ஒரு அச்சம். இதுவரை அவன் தன் தந்தையின் முன் நேராக நின்று பேசிய நாளே கிடையாது.

திருமண ஏற்பாட்டைக் கேள்விப்பட்டான். தங்கவேலுவின் நெஞ்ச வானிலே சதா நீந்தும் கோல நிலவானாள் கமலா. அவள் நினைவென்ற குளிர் நிழலிலே அவன் உச்சிக் குளிர்ந்து போனான். எப்படியும் கமலாவையே தன் வாழ்க்கைத் துணையாக வகுத்துக் கொள்வதென உறுதி செய்துவிட்டான். இந்த தன் எண்ணத்தை மறைமுகமாக வேறு சிலர் மூலம் தன் தந்தைக்கு அறிவித்து விடவும் செய்தான். இதனைக் கேள்வியுற்ற தனபால் செட்டியார் படபடக்கவில்லை; கண் சிவக்கவில்லை; பேச்சில் கனலைக் கக்கவில்லை; தனக்கே உரிய மென்முறுவலை வரவழைத்துக் கொண்டார். "என்ன இருந்தாலும் அறியாத பருவம் பாருங்கள்; உலகம் தெரியாதவன்'' என்பதோடு அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். அவர் என்றும் போலவே இருந்தார். எல்லாக் காரியங்களையும் தடங்கலின்றி செய்தவண்ண மிருந்தார். தன் தந்தையின் இந்த பராமுகமான பேச்சும், செயலும் தங்கவேலுவிற்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது.

திருமண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது; தந்தையின் முன் உறுதியான தன் முடிவை வெளியிடப் பல முறை முயன்றும் துணிவு பிறக்காததுகாண தனக்குத்தானே வெட்கப்பட்டுக் கொண்டான். "எதற்கும் கமலாவின் எண்ணத்தை நாம் தெரிந்து கொள்ளவில்லையே'' என்ற ஓர் ஏக்கம் அவன் உறுதியில் சிறு கீறல்விட்டது. சிந்தித்து சிந்தித்துப் பார்த்துக் கடைசியில் இந்த முடிவிற்குத்தான் தங்கவேலுவினால் வரமுடிந்தது. "யாருமறியாமல் வேலூர் புறப்பட்டுச் செல்வது, கமலாவைக் கண்டு அவள் முடிவை யறிந்து அவளையே மணந்து கொள்வது- பெற்றோர் மறுத்தால் பதிவுத் திருமணம் இருக்கவே இருக்கிறது. பின்னரும் புறக்கணிக்கப்பட்டால் என் வியர்வையால் அவளுக்கு விருந்தூட்ட முடியும்.'' இந்த எண்ணமே இறுதியில் ஓங்கி நின்றது.

அன்று அமாவாசை. திருமண நாள் இன்னும் இரண்டே நாளிருந்தது. உலகமே இருட் கடலில் மூழ்கியிருந்தது. யாருமறியாமல் வெளியேறிய தங்கவேலு மல

(10-ம் பக்கம் காண்க)

எதிரொலி

கைக் கடிகாரத் தொழிற்சாலையை நம் நாட்டில் நிறுவும் திட்டம் கை கூடவில்லை!

'—விகடனில்' சி. சுப்பிரமணியம்

0 ஏன், கால் கடிகாரத் தொழிற்சாலையை நிறுவும் திட்டத்தைப் போட்டிருந்தால் ஒருவேளை நடந்திருக்குமே!

*

சர்க்கரை உபரியால் கவலை வேண்டியதில்லை!

—தினமணி.

0 உபரியாக கிடைக்கிறதே என அதிகமாகச் சர்க்கரையைச் சாப்பிட்டுவிட்டு அதனால் சர்க்கரை வியாதி வந்துவிட்டால், அப்பொழுது கவலைப்பட வேண்டியது அதிகமாகி விடுமே!

*

சைதாப்பேட்டையில் காகிதத் தொழிற்சாலைக்கான இயந்திர சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்று அமைக்கப்படும்!

—தினச்செய்தி.

0 அடக்கடவுளே! காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவியிருந்தால் எங்களுக்கெல்லாம் கவலையே இல்லையே யென்று வருந்தி ஒரு அனுதாப தீர்மானத்தைத் தயாரித்து மத்திய அரசாங்கத்துக்கு அனுப்ப முடிவு செய்துள்ளதாம், சைதாப்பேட்டையின் கழுதைகள் சங்கம்!

*

மறைமுக வரிகள் அதிகரிப்பிற்கு எதிர்ப்பு!

—செய்தி.

0 இந்த எதிர்ப்பும் மறைமுகமாக இல்லாததால், இனி நேர்முகமாகவே அதிக வரிகள் விதிக்கப்படலாம்!

*

திராவிட மாயையிலிருந்து நாங்கள் விடுபட்டோம்!

—சம்பத்.

0 அதனால்தானு, இப்பொழுது 'தேசிய' மாயையில் விழுந்து விட்டார்கள்? என்று வினவுகிறார், விவரம் தெரிந்து 'ஏகபாரதத்திலி'ருந்து விலகிய ஒருவர்.

*

விலையைக் கட்டுப்படுத்தினால் வியாபாரிகள் கடைகளை மூடி விடுவர்!

—காமராசர்.

விலையைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாளை, மக்கள் உங்கள் 'அரசியல்' கடைகளை மூடிவிடப் போகின்றனரே!

* * *

--அன்புவாணன்.

தமிழரும் ஆந்திரரும்

தமிழறிஞர் மு. இராகவையங்கார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழர் ஆந்திரர் உறவு பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும் ஆற்றிய பேச்சின் 2-ம் பகுதி இங்கு தரப்படுகிறது. திராவிட நாடு எங்கிருக்கிறது, என்று ஏதும் தெரியாதவர்போல் கேட்போர் படித்துத் தெளியவும், கழகத்தோழர்கள் பயன் பெறவும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் பயன்படும்.

-2-

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயி னும்"

(குறுந்தொகை, 11)

என்ற மாமூலனார் வாக்கில், கட்டி யென்பவனது நாட்டிற்கு அப்பால்வடுகர் முனையையுடைய மொழி பெயர்தேயம் உள்ளதென்று கூறப்படுகின்றது. கட்டியரென்பர் சங்கநாளில் வலிமை பெற்றிருந்த ஒரு சார் சிற்றரசர்; பல்வேற்கட்டியர் (சிலப், 125; குறுங், 11) 'கங்கன்கட்டி' (அகம், 44) 'போராடு தானைக்கட்டி' (அகம், 226) என்ற பழந்தொடர்கள் காண்க. விஜரநகரவரசர் காலத்தும் அதன் பின்பும் கட்டி முதலியார் என்று பிரபலராய் விளங்கிய தலைவர்கள் இக்கட்டி மரபினராகவே தெரிகின்றனர்.

இன்னொரது ஆட்சிக்குட்பட்ட நாடு தமிழ் கன்னட தேசங்களின் இடைப்பட்ட சேலம் ஜில்லாவிற் பாதிக்கு மேற்பட்டிருந்தது. மற்றும் இவர் வரலாறுகள் சரித்திர நூல்களால் அறியதக்கன. தமிழ் நாட்டெல்லையில் இக்கட்டி நாடுள்ளதாக மாமூலனார் கூறியவாரே, அவர் மரபினரான கட்டி முதலியார் நாடும் பிற்காலத்தமைந்திருந்தமை அறியதக்கது. இக்கட்டி நாட்டுக்கும் அப்பாலுள்ளதாகக் குறுந்தொகை கூறும் வடுகர் 'முனை யென்பது, மேற்கூறிய படகர் நாட்டைக் குறிப்பதாகவே கொள்ளற்பாலது.

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்"
"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்"
"கற்றுரிக் குரம்பைக் கதநாய் வடுகர்"

(அகம். 107.)

எனச் சங்கச் செயுட்களினும்,

"வடுக வேடுவர்......ஆறலைக்கு மிடம்"
"வடுகர்வாழ் முருகன்பூண்டி"

(தேவா)

எனச் சுந்திரமூர்த்தி நாயினாராற் கொங்குநாட்டுத் திருமுருகன் பூண்டித் தேவாரத்துங் கூறப்பட்டவர்கள், இப்படக நாட்டவராகவேனும் அங்கிருந்து வந்தேரிய கன்னட வேடராகவேனும் கருதத் தகும். வேம்பத்தூரர் திருவிளையாடலில், மூர்த்தி நாயனார் காலத்தே மதுரையை வென்று கைப்பற்றிய சமணவரசனை, "கருநாடர் மன்னன்" என்று கூறிய அதனுசிரியர், அவனையே மற்றோரிடத்து "வடுகவேந்தன்" என்று பாடுகின்றார். இது மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவதாம். இப்போது நீலகிரியில் வாழும் படகர் என்ற கூட்டத்தார் மைசூரின் வடபாலினின்று ஆங்கு வந்தேரியவராகச் சொல்லப்படுதலால் அவரும் இம்படக நாட்டவரே யாதல் வேண்டும்.

தமிழகத்தைச் சூழ்ந்த நிலங்களிலே, கன்னடம், வடுகு, தெலுங்கம் என்பவை தனித்தனி நாடுகள் என்று நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 400-உரை) நன்னூற் பழைய உரைகாரரும் (272 மயிலை. உரை) கூறுகின்றனர். இவ்வாறு தெலுங்கு நாட்டின் வேருக வடுக நாடென ஒன்று எண்ணப்படுவது, மேற்கூறிய படக நாட்டைக் கருதியதாகக் கொள்ளலாம். இன்றேல், ஆந்திர தேசத்தின் வடபாகம் தெலுங்கம் என்றும், அதன் தென்பாகம் வடுகு என்றும்—செந்தமிழ் நாடு—கொடுந் தமிழ் நாடு என்ற தமிழகப் பகுப்புப்போல—ஆந்திரமும் இருவேருகத் தமிழரால் முற்காலத்து வழங்கப்பட்டது என்று கருதல் வேண்டும். எவ்வாருயினும், பிற்காலத்துத் தமிழ் மக்களெல்லாம் அவ்வேறுபாடு சிறிதுங் கருதாது, ஆந்திர பாஷையையும் அதன் மக்களையுமே, வடுகு வடுகர் என்ற சொற்களாற் பெரிதும் வழங்கி வரலாயினர்.

"சிலவடுகும் பலதமிழுங் குழறித்தரு கருநாடியர்"

(கலிங். பரணி)

"வடகலை தென்கலை வடுகு கன்னடம்"

(கம்பர்)

"கருநாடக சந்தமும்...வடுகச் சந்தமும்"

(யாப். வி.)

"வடுக ரருவாளர் வான்கரு நாடர்"

(நன். மயிலை)

என்ற தொடர்களால், தெலுங்கும் வடுகும் வேறல்ல என்பது தெளிவாதல் காண்க.

இனி, வடுகர் என்ற பெயரை ஆந்திர மக்கள் தங்கட்குள் வழங்கினவர் என்பதற்கு ஆதாரங் கிடைக்கவில்லை. அவ்வாரே, அரவர் என்ற பெயரைப் பழைய தமிழ்மக்கள் தங்கள் பெயராக வழங்கினவர்ல்லர். ஆனல் 300 ஆண்டுகட்கு முன்னிருந்த அகராதி நிகண்டு நூலார் மட்டும் இச்சொல்லை 'அரவரென்பது தமிழராகும்' என்று பிறநாட்டு வழக்கை எடுத்தாண்டனர். ரவ என்ற வடசொற்கு, ஒலி என்பது பொருளா யிருத்தல் கொண்டு, ஆந்திரர்க்குத் தமிழ் வேற்றொலியாகவே கேட்கப்பட்டமைப் பற்றி அதற்கு அரவப் பெயர் வழங்கலாயிற்று என்று தெலுங்கர் சிலர் பொருள் கூறுவதுண்டு. இது விநோதமானதோர் விற்பத்தியேயாகும். பழைய ஆந்திரர், தமிழர்க்கு வழங்கிவந்த பெயர் அருவர் என்பதேயன்றி அரவர் என்பதன்று. கலிங்கத்துப் போரிலே அந்நாட்டுச் சேனைகள் சோழர் படையைக் கண்டு 'தமிழர்! தமிழர்!' என்று கதறி நடுங்கின என்பதைக் கூறவந்தவிடத்தே செயங்கொண்டார்?—

"அருவர்! அருவர்!! எனு விறைஞ்சினர்
அபயம பய மெனு நடுங்கியே"

என்று பாடுகின்றார். இவ்வாறே, சோழர் நடத்திய அப்பெரும், போரைப் பற்றிய பழைய வெண்பாவொன்றும்,

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வட நாடர்
அருவ ரருவரென வஞ்சி— வெருவந்து
தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது"

என்று தண்டி யலங்காரத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இப் பிரமாணங்களிலிருந்து, அருவர் என்பதே ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிய பழைய பெயரென்பது வெளியாம். தெலுங்கு தேசத்தை ஒட்டியுள்ள தமிழகத்தின் பகுதிகள்—அருவா, அருவா வடதலை என்ற நாடுகளாம். இந்நாட்டாரை அருவாளர் என்பது பழைய தமிழ் வழக்கு. தம் பக்கத்து வாழும் தமிழராகிய இவ்வருவா நாட்டாரையே வடுகர் முதலில் அருவர் என வழங்க அதுவே தமிழர்க்கெல்லாம் உரிய பொதுப் பெயராக அவரால் வழங்கலாயிற்று என்று, அச்சொற்கு உறுப்பொருள் கொள்வதே நேரானதாம்.

இனி, தமிழரும், வடுகரும் முற்காலத்தும் பிற்காலத்தும் எவ்வகைத் தொடர்பு கொண்டிருந்தவர் என்பதை நோக்குவோம். இத் தொடர்பை மூன்று பகுதியாகக் கொண்டு ஆராய்ச்சி செய்தல் தகும். முதலாவது—தமிழரும் ஆந்திரரும் தம்முட் பெரும்பாலும் நட்பினராய் வாழ்ந்த காலமாகும். இரண்டாவது—தமிழர் ஆந்திரரின் மேம்பட்டு ஆண்ட காலமாம். மூன்ருவது—ஆந்திரர் தமிழரின் மேம்பட்டு ஆண்ட காலமாகும்.

இவற்றுள், முதற் பகுப்புச் சங்க காலத்துக்கு உரியது. சங்க செய்யுட்கள் என்று வழங்கும் பழைய தமிழ் நூல்களை ஆராய்வோமாயின், தமிழகத்தின் எல்லைப் பக்கங்களிலே சிறு கலகங்கள் நடந்திருக்கக் கூடுமேனும், பெரும் பகைமை அவர்க்குளிருந்தசெய்தியேனும், பெரும் போர்கள் விளைந்தன என்பதேனும் வெளியாகவில்லை.

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு"

(அகம். 281)

"சோழர் பெருமகன்...இளம் பெருஞ் சென்னி
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி"

(அகம். 375)

என்ற தொடர்களிற் கூறப்பட்ட வடுகர், முறையே மௌரியரும் நன்னனுமாகியவர்க்குத் துணையாகவந்த படக நாட்டுக் கன்னடராகத் தெரிகின்றனரே யன்றி, ஆந்திர நாட்டவராகத் துணியக் கூடவில்லை. இனித் தமிழரசராகிய சேர சோழ பாண்டியர் மூவரும், வடவேங்கடந் தென்குமரிக் குட்பட்ட தமிழகத்துக்கும் அப்பால் தம் வீரப் பெருமையை விரித்தவர்களாயினும், தமிழ்கூறு நல்லுலகமே தங்கள் தேசம் என்ற அபிமானம் அவர்க்குள் மிகுந்திருந்தமையால் வேற்றுமொழி வழங்கும் நிலப் பகுதிகளைத் தமிழகத்துடன் கலப்பதில் அவர்கள் விருப்பின்றி யிருந்தவர் என்றே சொல்லலாம்.

(தொடரும்)

(9-ம் பக்க தொடர்ச்சி)

பார் எக்ஸ்பிரசில் சென்று கொண்டிருந்தான்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. அவன் உள்ளம் அதைவிட வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஜோலார்ப்பேட்டையில் வண்டி நின்றது. தங்கவேலு தான் ஏறியிருந்த பெட்டியில் தன் கண்களைச் சுழலவிட்டான். என்ன ஆச்சரியம். அடுத்த வரிசையில் கமலா இவனையே இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தங்கவேலு செய்வதறியாது தடுமாறினுன்; பேச அவன் நா எழுந்தது; அது அப்படியே ஒட்டிக் கொண்டது; சொல் வெளிவரவில்லை. அந்த நேரத்தில் கமலாவின் கழுத்தில் இருந்த மஞ்சள் கயறு அவன் கண்களைக் கவர்ந்தது. அவன் தலை சுழன்றது. இந்த உலகமே அவனுக்குச் சுற்றுவது போலிருந்தது. அவள் அருகில் அவள் கணவன் அமர்ந்திருந்தான். இரண்டாவது மணி அடித்தாகிவிட்டது. ரயில் மெதுவாக நகர்ந்தது. ஏதோ முடிவிற்கு வந்தவன்போல் அவசர அவசரமாக ரயிலைவிட்டு இறங்கினுன். வாழ்விலே காதல் திருப்பத்தை உருவாக்கிவிட்டு கமலா அவன் கண்களிலிருந்தே மறைந்துவிட்டாள்.

—0—



குறிச்சிப்பட்டி

கோமளீ!

மனமே சரியில்லை. உள்ளத்திலிருப்பதை உன்னிடம் கொட்டினுலாவது ஒரு அமைதி கிடைக்காதா என்றுதான், இக்கடிதத்தை அனுப்புகிறேன். உனக்குத்தான் தெரியுமே, எப்போதும் என் கணவர், அவசரக்காரர் என்று. அதே குணத்துடன், அண்மையில் ஏதோ காரியம் செய்துவிட்டார் போலிருக்கிறது. கடையிலிருந்து வரும்போதும், முட்டாள்தனம், மோசம் போய்விட்டேன் என்று முனகுகிருர். சாப்பிட உட்கார்ந்தாலும் அப்படியே சொல்கிருர், என்னங்க! ஏனிப்படி வருத்தமாயிருக்கீங்க!! என்று கேட்டாலோ, உனக்கென்ன, செருப்பு இருந்தால் எடுத்துவந்து, என் புத்தியைப்போட்டு அடி, என்கிருர், நேற்று இரவு தூக்கத்தில்கூட 'நான் ஒரு முட்டாள்' 'முட்டாள்' என்றே உளறினுர். அப்படியென்ன முட்டாள் தனம் செய்திருப்பார் என்று என்னுல் யூகிக்கவும் முடியவில்லை. கடைப் பையனைக் கேட்டேன். சென்னைக்குச் சென்று வந்ததிலிருந்து, அப்படித்தானிருக்கிருர் ஐயா, என்கிகிருன். முட்டாள் தனமாக ஆண்கள் செய்யக்கூடிய காரியம் என்னவாடியிருக்கும்? என்னைவிட உனக்கு அனுபவம் அதிகமாயிற்றே. நீதானே முன்பு ஒரு முறை என்னை எச்சரித்தாய், மனக் கவலையோடு ஆண்களிருக்கும்போது, காரணங் கேட்டு, அவர்கள் எரிச்சலைக் கிளராதே—இப்படிக் கிளறினுல், வீண் சண்டை வளர்ந்து, அடி விழும் வரையில் செல்லும் என்று. அதனுல்தான், இந்தக் கடிதத்தை உனக்கு அனுப்பியிருக்கிறேன். என்னைக் கொஞ்சம் தெளிவாக்குவாயாடி?

உன்,
சாந்தா.

*

விராலிமலை

சாந்தா,

கடிதம் பார்த்தேன். ஆண்கள் முட்டாள் தனமாகச் செய்யக்கூடிய ஒன்று, காதல்தான்! ஆனுல், கலியாணமாகிக் குழந்தைகுட்டிகளுடனிருக்கும் உன் கணவர் எங்கே, அந்தப் பாதைக்குப் போயிருக்கப் போகிருர். அதனுல், யாராவது பெண்பிள்ளைகளிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பாரோ என்று நினைக்கவேண்டாம். என் கணவர் கூட, நீ சொல்கிற மாதிரிதான், இங்கே உளறிக் கொண்டிருக்கிருர். மடத்தனம்—ஏமாந்துவிட்டேன்—சீச்சீ!—நான் ஒரு முட்டாள், என பல வார்த்தைகளைச் சொல்லித் தன்னை நொந்து கொள்கிருர். நான் கேட்டு விட்டதாகத் தெரிந்தால், உடனே, வாயை மூடிக்கொண்டு 'உம்' மென்று உட்கார்ந்துவிடுகிருர். ஒருவேளை இன்புலுயன்சா, மலேரியா என்பது போல, ஆண்கள், தங்களைத் தாங்களே நொந்து கொள்ளும்படி ஏதாவது ஒரு புதுவித வியாதி வந்திருக்குமோ! எப்படி நெருங்கிக்கேட்டாலும், நீ சொல்கிற அறிகுறிகள்தான் இவருக்கும் உள்ளன. எல்லாவற்றிற்கும் என் அண்ணனுக்குத் தந்தி கொடுக்கலாமென்றிருக்கிறேன்.

உன்,
கோமளம்.

*

சென்னை

அன்புள்ள தங்கை கோமளத்துக்கு,

உன் தந்தி கண்டு சிரிப்புத்தான் வந்தது. உன் கணவரும் சாந்தாவின் கணவரும் இங்கு சென்னைக்கு வந்தார்கள். ஒற்றவாடைக்கு அவசரமாகப் போகவேண்டுமென்று, வந்ததும் வராததுமாகப் போனுர்கள். திரும்பி மாலையில் வந்தபோது, அவர்கள் இருவரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தனர். ஒருவேளை, 'ரேசுக்கு'ப் போய் விட்டு வந்திருப்பார்களோ என்று நினைத்தேன். அதற்குள் என் மனைவி, இதோ பாருங்க, என்று 'தனியரசு' பத்திரிகையைக் கொண்டுவந்து கொடுத்தாள். நான் இந்தப் பத்திரிகையையும் தினத்தந்தியையும் படிக்கமாட்டேன் என்றுதான் உனக்குத் தெரியுமே! உன் கணவரும், சாந்தாவின் புருடனும், இத்தனை நாளும் சேர்ந்து பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிவிட்டதாக, அந்தப் பத்திரிகையில் செய்தி போடப் பட்டிருந்நது. நான் ஆச்சரியப் பட்டுப் போனேன்! அறிஞர் அண்ணு என்ருல் உயிரையும் கொடுக்கத்கூடிய உன் கணவரா இப்படிச் செய்தார் என்று யோசித்தேன். எனக்கே மலைப்பாயிருந்தது ஏனிப்படிச் சோகமாயிருக்கிருர்கள் என்று கேட்கலாம் என்று தேடினுல், ஆட்கள் இல்லை. கொண்டுவந்த பைகளும் இல்லை. என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே, ஊருக்குக், கம்பி நீட்டிவிட்டார்கள் போலிருக்கிறது. ஆகவே, நீ நினைப்பது போல, இது ஒன்றும் வியாதியல்ல. விசாரப்படாதே.

அண்ணன்,
டாக்டர் காமேசுவரன்.

* * *

குறிச்சிப்பட்டி

அன்புள்ள மணியனுக்கு,

கழகத்தில் தீவிரவாதம் வேண்டும் என்று சொன்னதைக் கேட்டு, ஒற்றைவாடைக்குப் போனேனும். உள்ளே விடுவதாயிருந்தால், 'விலகிவிட்டேன்' என்று கையெழுத்துப் போடச் சொன்னுர்கள். உள்ளே, எப்படி தீவிரமான திட்டங்கள் தீட்டப் போகிருர்களோ, பார்க்க வேண்டுமே என்கிற ஆசையால் நீ தடுத்தும், உள்ளே போகலாமென உன்னை இழுத்தேன்! அவசரப் புத்தியால், எவ்வளவு பெரிய தவறினை, நான் செய்ததோடு மட்டுமின்றி உன்னையும் சிக்க வைத்து விட்டேன். உள்ளே போனபிறகுதானே புரிந்தது; திராவிடநாட்டை விட்டு விடுவது தான் இத்தனை நாளும் பேசிய தீவிர வாதம் என்று புதியகட்சி ஆரம்பிப்போம் என்று ,அந்த ஆள்' சொன்னதும், எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்போதே எழுந்து, இது அடாது கூடாது, என்று நீயும் நானும் வந்து விட்டோம். ஆனுல்' ஆசைத்தம்பி, கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டு கொட்டகைக்குள் நுழைந்தோரின் பெயர்களையெல்லாம் விலகியோரின் பட்டியலில் சேர்த்துவிட்டார். பத்திரிகையைப் பார்த்ததுமே, யார் முகத்திலும் விழிக்காமல், நீயும் நானும் ஊருக்கு ஓடிவந்தோம்! மனம், நிம்மதியில்லை. என்மனைவி, எனக்குப் பைத்தியமோ என்று சந்தேகப் பட்டுவிடுவாள் போலிருக்கிறது. வெளியே கிளம்பவே வெட்கமாயிருக்கிறது. பார்லிமெண்டு மெம்பர், இன்னைக்கு ஒரு கொள்கையைச் சரி எனலாம்—நாளை அது சரியில்லையென்று சொல்லலாம். அவருக்கு, அதைப்பற்றி அக்கரையில்லாமலுமிருக்கலாம், ஆனுல்; நமக்கு அப்படியா? உயிரை விட்டாலும், திராவிடநாடு என்கிற இலட்சிய கீதத்தை மறக்க முடியுமா. எனக்கும்உனக்கும்சேர்த்து, இரண்டுடிக்கட்வாங்கிவைத்திருக்கிறேன். நாம்செய்த தவறைச் சொல்லி, ஏதாவது பரிகாரம் செய்யும்படி பொதுக் குழுவைக் கேட்கலாம். இரவே தூத்துக்குடிக்குப் போகத் தயாராகவா!

அன்புள்ள,
ஆதிகுடி.

* * *

குறிச்சிப்பட்டி

கோமளீ!

கூத்தையென்னடி சொல்வேன்-தூத்துக்குடிக்குப் போனவர், நூறுமுத்துச் சிப்பிகளை மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து உடைத்துப்பார் என்று குதியாய்க் குதிக்கிருர். இன்னெரு மூட்டையிலே, வாழைப் பழமும் திராட்சையும்-கோடைரோடில் வாங்கினுராம். அவருக்கு வந்த வியாதியெல்லாம் போய் விட்டது! உற்சாகம் கரை புரண்டோடுகிறது! என்னங்க, ஏன் முன்பு 'உம்' என்று இருந்தீர்கள், இன்று இப்படி குதூகலிக்கிறீர்கள் என்று கேட்டேன். உனக்கென்னடி தெரியும், அண்ணுவுக்கே அவசரப்பட்டுத் துரோகத் செய்து விட்டேன். ஒருபயல், அண்ணுவை, இழிசொல் கொண்டு தாக்கினுல் பொறுக்க மாட்டேன். என் புத்திபோன போக்கு! போன கிழமை, ஒற்றைவாடைக்குள் நுழைந்து, கருவா[illegible] போல வந்தேன். கண்ணைவிட முக்கியமான திராவிட நாடுக் கொள்கையைத் தீதென்றனர், அங்கே! தீயை மிதிப்பதுபோல், ஓடிவந்தேன், இருந்தாலும், கழகத்தை விட்டு விலகியவர்கள் பட்டியலில், என் பெயரும் வந்து விட்டது. புதுக்கட்சி ஆரம்பிக்கப் போவதாகத் தெரிந்தால், அந்தப் பக்கம் தலையே காட்டியிருக்க மாட்டேன். ஏதோ, கழகத்தில் தீவிரம் வேண்டுமென்கிருரே-வேண்டியதுதானே தீவிரம்—அதைப் போய்ப் பார்ப்போம் என்று போனுல், இப்படியொரு அவமானம் உண்டுபண்ணுவார்கள் என்று யார்தான் நம்பமுடியும்! ஊருக்கு வந்தது முதல் ஒவ்வொரு வரும் என்னைப் பார்க்கும் பார்வையும், கழகத்தோழர்கள் முகம் கொடுக்காமல் போவதையும் பார்த்து, ஒவ்வொரு நிமிடமும் புழுப்போலத் துடித்ததுதான் உனக்குத் தெரியுமே. தூத்துக்குடியில் நடைபெற்ற பொதுக் குழுவில், என்னைப்போல் அவசரப் பட்டவர்களுக்காக இந்த மாதம் 30ந் தேதிவரை 'டயம்' கொடுத்திருக்கிருர்கள். அங்கேயே நான் விலகவில்லை என்று 'நம்நாடு'க்கு ஒரு செய்தி கொடுத்து விட்டு, ஆனந்தத்தோடு ரயிலேறி வந்திருக்கிறேன் என்று அவர், ஆடுவதும், பாடுவதும், இன்றைக்கு இரவுஎப்படிப் போகுமோ என்றிருக்கிறது. ஆமாண்டி, அவர், ரொம்ப அவசரக் காரர் என்பதுதான் உனக்குத் தெரியுமே!! இத்துடன், தோட்டத்தில் பூத்த, மலர்களையும் அனுப்பியுள்ளேன். தொடுத்து வைத்துக் கொள்.

உன்
சாந்தா

அடுத்த இதழ்!

மே தின மலர்

மிகச் சிறப்புடன்

அறப்போர்
சென்னை-24

கேள்வி பதில்

கே: தி. மு. க. தேர்தல் நிதிக்கு பொதுமக்களால் கொடுக்கப்பட்டப் பணத்தை—தேசீய கட்சியின் வளர்ச்சிக்குச் சிலர் பயன்படுத்தப் போகிறார்களாமே? இது என்ன நியாயம்?

க. வெற்றிவேந்தன்
13-16 லாலி ரோடு, கோவை.

ப: தி. மு. க. தேர்தல் நிதி, அவர்கள் வசம், அதிகமிருக்காது. அப்படியே இருந்தாலும், அதனைத் தங்கள் புதுக் கட்சிக்குப் பயன்படுத்தினால், நன்கொடை தந்த எந்தத் தோழருக்கும் நிதியைக் கொடுக்குமாறு கேட்க உரிமையுண்டு. கேட்டால், கொடுப்பார்களா என்று என்னால், சொல்ல முடியாது. கொடுக்கின்ற மனமிருந்தால், சம்பத்தின் வசமிருக்கும் கழகத்தின் இந்தி எதிர்ப்பு நிதி (சுமார் 20 ஆயிரம் என்கிறார்கள்! கணக்குத்தான் கழகத்தின் தணிக்கைக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்படவில்லையே!!) -இத்தனை நாளும், கழகத்துக்கு வந்து சேர்ந்திருக்குமே.

*

கே: அண்ணா! 'திராவிட நாடு' என்ற சொல் இலக்கியத்தில் இல்லை யென்று ஆதித்தன் சொல்கிறாரே, உண்மையா அண்ணா!

தங்கராசன்—ஆமதாபாத் 8.

ப: ஆதித்தனைவிட அதிகமாக தமிழறிவு உள்ளவர் நெடுஞ்செழியனும், அன்பழகனும், தமிழில் 'எம். ஏ. பட்டம் பெற்றவர்கள். ஆதித்தனைவிடப் புலமைத் திறனும், பொதுவாழ்வுத் தூய்மையும் கொண்டவர் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவருரையினை இந்த இதழின் 3-ம் பக்கத்தில் காணலாம். திராவிட நாடு, உண்டா இல்லையா என்கிற வாதம், நமக்குத் தேவையில்லை. அப்படி ஒரு நாடு அமைய வேண்டுமென்பது நமது இலட்சியம். அந்த அமைப்பை, நாம் திராவிட நாடு என்கிறோம். அதற்கு, எல்லா வகையான வரலாற்று ஆதாரங்களையும் இதுநாள் வரையில் சொல்லி வருகிறோம். அப்படியும், அங்கே இல்லை—இங்கே இல்லை என்று அரைத்த மாவையே திரும்பத் திரும்ப ஆதித்தனார்கள் சொன்னால், உங்களைப் போன்றவர்கள், அடித்துப் பேசுங்கள், "ஆமய்யா! இலக்கியத்தில் இல்லை. என்ன அதனால்? இனம் இல்லை யென்கிறாயா? என்ன. அதனால் திரு—இடம்—நாடு, ...திராவிட நாடு. அழகு பொருந்திய நாடு என்பதைத் 'திராவிட நாடு' என்கிறோம். கன்னடமும், தெலுங்கும், மலையாளமும், தமிழகமும் அமைந்ததைத் திரு இடம் என்கிறோம். இப்ப என்ன சொல்கிறாய்?" என்று கேளுங்கள். விதண்டா வாதத்தை வெல்ல, நாமும் விதண்டாவாதிகளாய் மாற வேண்டியதுதான்! நாம் விதண்டா வாதத்துக்குப் போனாலும், பொருளிருக்கும்—அவர்களுடைய வாதங்களில் பொருமைதான் இருக்கும்.

*

கே: கீழ்க் கண்டவர்களைப் பற்றி தங்கள் கருத்து? 1. அறிஞர் அண்ணா, 2. காமராஜர், 3. ஆச்சாரியார், 4. பெரியார், 5. ஆதித்தன், 6, ம. பொ. சி. 7- சம்பத்,

பு. இரத்தினவேல்
பனங்குளம்—அறந்தாங்கி,

ப: 1. உதயசூரியன். 2. காளை மாடு. 3. கோடைகாலத்து மரம். 4, மாடி வீடு. 5. தாடி. 6. கோழி. 7. கழகநிதி—ஆகியவைகள்தான், இவர்களைப் பற்றி எண்ணினால், எனக்கு நினைவுக்கு வருகின்றன!!

*

கே: தி. மு. கழகச் சட்டதிட்டங்கள் மாற்றி அமைக்கப் படுமா?

—கு. சேரன்
இராசிபாளையம்

ப: தில்லைவில்லாளன் எம். ஏ. பி. எல்,, ப. உ. சண்முகம் எம்.எல். ஏ. டி. கே. சீனிவாசன் ஆகிய மூவரும் கொண்ட யரிசிலனைக் குழுவுக்கு, உங்கள் கருத்தினை எழுதி அனுப்பலாம்!

*

கே: வருகிற பொதுத் தேர்தலில் நமது கழகம், செங்கொடி வீரர்களுடன் சேர்ந்து செயல்படுவது நன்மை தரும். முதியவர் இராசாசியுடன் சேர்ந்தால் நமது கொள்கை மாறும். தங்கள் கருத்தென்ன?

—கு. சீனிவாசன்
சரக்கப்பிள்ளையூர்

ப: தி. மு. க. பொதுக்குழு எடுக்கின்ற முடிவே, என் முடிவு. தங்களுக்குத் தோன்றும் கருத்துக்களை, பொதுச் செயலாளர் அல்லது தலைமை நிலையச் செயலாளர் பார்வைக்கு எழுதி அனுப்பலாம்.

*

கே: தி. மு, க. வில் சிறந்த அறிவாளியும் அரசியல் வாதியும் யார்!

—எம். ஜி. முருகேசன்
சென்னை 12.

ப: அண்ணாவின் வழியினை சுய நலமில்லாமல் அணுகும் எல்லோரும்.

*

கே: அண்ணா! நம் குடும்பத்தில் ஏற்பட்ட இந்த எதிர்பாராத அதிர்ச்சியை மீண்டும் சமரசமாக்கி வாழ்விழந்த வளமார் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வளிக்க ஏன் நம் தலைவர்கள் முயற்சி எடுக்கவில்லை?

—கு. இ, இளங்கோ
குர்லா, பம்பாய்,

ப: தம்பீ! அப்படியொரு சமரசம் ஏற்படவேண்டும். சம்பத் மட்டுமல்ல, யாருமே போகக்கூடாது என்பதற்காகக் கழகத் தலைவர்கள் காட்டிவந்த பொறுமை ஒவ்வொரு தடவையும் கொண்டிருந்த சகிப்புத் தன்மை, அளவிடற்கரியது. வேலூர் பொதுக் குழு முடிந்ததும் விட்டாரல்லவா அறிக்கை. மேல் அறிக்கை! அப்போது சமரசம் செய்துவைக்க மதுரை துரையரசுவும், டாக்டர் அருணாசலமும் வந்து, அண்ணாவையும் யும் சம்பத்தையும் சந்தித்துப் பேசச் சொன்னார்கள். அண்ணா, சரி என்றார். சம்பத் காஞ்சிபுரம் வரமாட்டேன் என்றார். "சரி நான் இன்று நாகர்க்கோயில் போகிறேன். சீக்கிரமாகவே ரயிலேறி செங்கற்பட்டு வந்து விடுகிறேன். அங்கு சம்பத்து வரட்டும். பேசலாம்," என்றார் அண்ணா. "முடியாது! வேண்டுமானால் என்னைப் பார்க்க சென்னைக்கு வரட்டும்," என்றார் சம்பத்து. யோசி தம்பி, அண்ணா, சம்பத்தைப் பார்க்க சென்னைக்கு வரவேண்டுமாம்! இந்தச் செய்தி 'நவ இந்தியா' வில் உடனே வந்தது. எந்தச் செய்தியையும் உடனுக்குடன் பத்திரிகைகளில் போட்டுப் பகிரங்கப் படுத்திக்கொண்டே வந்தார், சம்பத். செய்தி கண்டதும் சென்னைக்கு வந்திருந்த தில்லை வில்லாளன், அவசர அவசரமாகக் காஞ்சிக்குப் போனார்—"அண்ணா! உங்கள் தன்மானத்தை இழக்க நாங்கள் விடமாட்டோம். உங்களுக்குப் பேட்டி கொடுக்கிற அளவுக்கா, சம்பத், வளர்ந்து விட்டார்?"—என்கிற ஆத்திரத்துடன். ஆனால், அண்ணா, என்ன செய்தார் தெரியுமோ? வில்லாளனுக்குத் தெரியாமல்; அவரைக் காஞ்சியில் விட்டு விட்டு, சம்பத்தைச் சந்திக்க் நான் எங்கே வரவேண்டும் என்று 'போனில்' கேட்டார். தியாகராய நகரிலுள்ள ஒரு வீட்டு விலாசத்தைக் கொடுத்து, அங்கே வரச் சொன்னார், தன் ஆள் மூலம் சம்பத். அண்ணா வேறொருவர் காரில், காஞ்சியிலிருந்து; மத்தியானம் சாப்பிட வீட்டுககுப் போனால் வில்லாளன் ஏதாவது சொல்லி மடக்குவாரோ என்று நேரே சென்னைக்கு வந்தார். கொடுக்கப்பட்ட விலாசத்துக்கும் சென்றார். அவரை வரவேற்க யாரும் இல்லை! பசி வேறு. அந்த வீடு எது தெரியுமா? 'பார்த்திபன் கனவு' எடுத்த ஜுபிலி பிலிம்ஸ் என்கிற இடம்! எப்படியிருக்கும் அண்ணாவுக்கு? அதையும் சகித்துக்கொண்டு; சம்பத்துக்கு ஆளனுப்பினார். இரண்டு மணி நேரம் காத்திருந்தார். அந்த வீட்டுக்கும் சம்பத் வீட்டுக்கும் ஒன்றரை பர்லாங்கு தான் இருக்கும். சம்பத் வரவில்லை. தன்னந் தனியாக இனம் தெரியாத இடத்தில் ஒரு சம்பத்துக்காக, இந்நாட்டின் அறிஞர் கோமான் காத்திருக்கிறார். வரவில்லை, சம்பத்! "நான் வரமாட்டேன். என் நிபந்தனைகள் சிலதை அவர் ஒப்புக்கொள்வதாகச் சொன்னால்தான் வருவேன்." என்று ஆள் மூலம் சொல்லியனுப்பினார். அப்போதும், ஆத்திரமடையவில்லை, அண்ணா! பொறுமையின் உருவாயிற்றே!! "என்ன நிபந்தனையாம் சொல்லட்டுமே" என்ற பிறகுதான், சமரசத்துக்கு வந்தவர்களும் சலிப்பு கொண்டு சம்பத்திடம் போய்க் கோபிக்க, அண்ணாவைப் பார்க்கவந்தார். அப்போது, இருவரும் வெளியிட்ட அறிக்கையை நீ படித்திருப்பாய் என நினைக்கிறேன்! இப்படியெல்லாம் அண்ணா அவமானப்படுத்தப் படுகிறார்—பூல்! இடியட்!! என்னய்யா தெரியும்? என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறார்-அண்ணாவை அவமானப்படுத்த அவர் எதிரிலேயே கூச்சல் போடுகிறார்—என்கின்ற செய்திகளைக் கேட்கும்போது, எங்கள் மனம் எப்படிக் குமுறிற்று தெரியுமா? இருந்தாலும், சம்பத் உண்ணாவிரதம் என்றதும் ஓடோடியும் பார்த்தோம் — அணைத்தோம் —பாசத்தோடு பழகினோம். கடைசியில் விலகல் அறிக்கை வரப்போகிறது என்று கேள்விப்பட்டு; 'வேண்டாம் சம்பத்' என்று என். வி. நடராசனை ஓடச்சொன்னார் அண்ணா. என். வி. என். அவர்களை ஒரு அறைக்குள் பேச்சுக்கொடுத்தபடியே இருக்க வைத்துவிட்டு 'டெலிபோன்' மூலம் நிருபர்களுக்கு அறிக்கை தரப்பட்டிருக்கிறது! "அப்பங்க என். வி. என். போய்வாங்க! என் ராஜினமா பிரசுக்குப் போய்விட்டது" என்றாராம் சம்பத். என்ன தம்பி செய்யச் சொல்கிறாய்? இதைவிட, இன்னும் என்ன செய்திருந்தாலும் அவர் போகாமலிருந்திருக்க மாட்டார்! அதற்கான காரணம் என்ன என்று, அங்கே தானே பணக்கார அரசியல் வாதிகள் இருக்கிறார்கள், அவர்களைக்கேட்டு, எனக்கும் எழுதேன்!!

*

கே: அண்ணா! நீங்கள் எவ்வளவோ ஆதாரங்களை ஆங்கில மொழிகளிலிருந்து எடுத்துக் காட்டுகின்றீர்களே! உங்கள் கல்வி என்ன?

—அதே தோழர்.

ப: இன்டர் முதல் வகுப்பில் பெற்ற தோல்வி, என்னைப் பசியுள்ளவனுக்கியது. குன்று போல் அன்னம் என்ற மாதிரி, அண்ணா கிடைத்தார்,எனக்கு. அரசியல்—பொருளாதாரம் — உலக அரசுகள் சம்பந்தப்பட்ட சகல நூல்களையும், பட்டம் வாங்குகிற அளவுக்கு, அந்தப் பசியின் காரணமாகப் படித்தித் தீர்த்தேன். இன்னும் அடங்கவில்லை பசி! படித்துக்கொண்டேயிருக்க, போதிய நேரமில்லையே என்று அழுகிறேன்!!

*

கே: ஈ. வெ. கி. சம்பத்தைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?

—தமிழ்வேந்தன்,
16, சடையப்ப முதலிதெரு,
பண்ருட்டி.

ப: என் கழகத்திலிருந்த நல்ல பேச்சாளர்! அவரை 'டில்லி' கெடுத்துவிட்டது!!

—*—

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
... 2-10 ... அச்சகம் சென்னை-6